REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஒகஸ்ட் 1 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்
வரு. 91 இல. 180
Tuesday 01, August, 2023
12 பக்கங்கள்
50/-

## தாமரை கோபுரத்தில் 'கோ பங்கி' விளையாட்டு

### சிங்கப்பூரிலிருந்து 10,000 வீரர்கள் வருவர்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



சிங்கப்பூரின் ஜனரஞ்சக விநோத விளையாட்டு தொடர்பான நிறுவனமான 'கோ பங்கி' நிறுவனத்திடமிருந்து வருடாந்தம் 04

## ஜூலி சங் வொஷிங்டனுக்கு மீள அழைக்கப்படவில்லை

### — அமெரிக்க தூதரகம் நேற்று அறிவிப்பு



இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வொசிங்டனுக்கு மீள அழைக்கப்படவில்லை என்று கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், ட்விட்டரில் செயலூக்கமுள்ளவராக இருப்பதுடன், இலங்கை 04

### இலங்கை பிரீமியர் லீக் (LPL) போட்டி ஆரம்ப நிகழ்வில்

## தேசிய கீதத்தின் அர்த்தம் தவறான முறையில் உச்சரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



இலங்கை பிரீமியர் லீக் விளையாட்டுப் போட்டியின் ஆரம்ப நிகழ்வில் தேசிய கீதத்தை அதன் அர்த்தம் மாறுபடும் வகையில் மாற்றிப் பாடியமை தொடர்பில் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. அதேவேளை தேசிய கீதத்தை தன்னிச்சையாக 04

## ஜப்பானிய அரசின் ஆதரவுடனான அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் முன்னெடுப்பு


### விரைவில் மீள ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம்



ஜப்பானிய அரசின் ஆதரவுடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை விரைவில் மீள ஆரம்பிப்பது குறித்து 03

## கோழி இறைச்சி இறக்குமதிக்கு ஜனாதிபதி அனுமதி

லோரன்ஸ் செல்வநாயகம்



கைத்தொழில் துறைக்கு தேவைப்படும் கோழி இறைச்சியை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதற்கு வாய்ப்புகளை வழங்க ஜனாதிபதி ரணில் 04

## போலி கடவுச்சீட்டுகளில் ஐரோப்பா செல்ல முயற்சி

### விமான நிலையத்தில் 05 தமிழ் இளைஞர்கள் கைது


லோரன்ஸ் செல்வநாயகம்



போலியாக தயாரிக்கப்பட்ட கடவுச்சீட்டு மற்றும் விமான டிக்கட்டுகளை உபயோகித்து ஐரோப்பிய நாடொன்றுக்கு செல்வதற்கு முற்பட்ட ஐந்து இளைஞர்கள் நேற்று காலை 04

## கிளிநொச்சியில் கைப்பற்றப்பட்ட பெருந்தொகை சட்டவிரோத மணல்

### மக்களுக்கு பகிர்ந்தளிக்க அமைச்சர் டக்ளஸ் ஆலோசனை



கைப்பற்றப்பட்ட மணலை நீதிமன்றத்தின் அனுமதியுடன் நியாயமான விலையில் பிரதேச மக்களுக்கு பகிர்ந்தளிக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்த ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோத மணல் அகழ்வினை கட்டுப்படுத்தும் நோக்கில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் 04

### சமுர்த்தி உதவி பெற்று அஸ்வெசுமவுக்கு விண்ணப்பித்த 1,280,000 பேருக்கு நலன்புரி கொடுப்பனவுகள்:

# 887,653 குடும்பங்களுக்கு 'அஸ்வெசும'

# 393,094 குடும்பங்களுக்கு 'சமுர்த்தி'

**20 இலட்சம் குடும்பங்களுக்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு வழங்க தீர்மானித்துள்ளதுடன் மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகள் பரிசீலனையின் பின் அந்த இலக்கை அடையமுடியும்**



லோரன்ஸ் செல்வநாயகம்

தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களில் அஸ்வெசும நலன்புரி செயற்றிட்டத்திற்காக தகைமையற்ற 393,094 குடும்பங்களுக்கு தொடர்ந்தும் சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் தற்போது சமுர்த்தி நிவாரணங்களைப் பெறுக்கொள்ளும் தரப்பினருக்குள் 1,280,000 குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுக்காக விண்ணப்பித்துள்ளதுடன் அவற்றில் 887,653 குடும்பங்கள் அதற்கு தகைமைபெற்றுள்ளன என்றும் தெரிவித்துள்ளன. அதுதொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 04

### தர குறைபாடுகள் காரணமாக

## 65 வகையான மருந்துகள் பாவனையிலிருந்து நீக்கம்

### கடந்த 07 மாதங்களில் அமைச்சு அதிரடி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தர நிர்ணயம் தொடர்பான சிக்கல்கள் காரணமாக 65 மருந்துப்பொருட்கள் பாவனையில் இருந்து 04

Ministry Of Health

### சர்வதேச கப்பல் நிறுவனங்களில்

## 13,000 பேருக்கு ஹோட்டல் துறையில் தொழில் வாய்ப்பு

### தொழில்பயிற்சி அமைச்சுடன் கலந்துரையாடல்

ஹோட்டல் முகாமைத்துவத் துறையில் 13,000 பயிற்சியாளர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச கப்பல் நிறுவனங்கள், திறன் அபிவிருத்தி 04

## மாகாண மட்டத்தில் புதிதாக பட்டதாரி ஆசிரியர்கள்

### நியமிக்க அரசு திட்டமிட்டுள்ளதாக கல்வியமைச்சர் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்க பாடசாலைகளுக்கு புதிய பட்டதாரிகளை இணைத்துக் கொள்வது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மாகாண மட்டத்திலேயே முன்னெடுக்கப்பட வேண்டும் 04

### கூட்டமைப்பின் கோரிக்கைக்கு ஏதுவாக

## இந்திய தூதுவரை இன்று சந்திக்கிறது TNA அணி



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே இன்று செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். கூட்டமைப்பின் கோரிக்கையின் 04

### மைத்திரிபாலவின் ரிட் மனு;

## விசாரணையிலிருந்து விலகினார் நீதிபதி

### ஐவரடங்கிய குழுவில் ஒருவர் விலகல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தமக்கு எதிராக கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டை 04

## தமிழரசுக் கட்சி வரலாற்றில் மட்டு மாவட்டத்திற்கு கௌரவம்

### 73 வருட கால வரலாற்றில் புதிய மாவட்ட நிர்வாகிகள்



இலங்கை தமிழரசுக் கட்சியின் 73 ஆண்டு கால வரலாற்றில் முதன் முதலாக மட்டக்களப்பு மாவட்ட புதிய நிர்வாக தெரிவு 03

## இம் மாதம் எரிபொருள் விலைகளில் திருத்தம் வரும்

### 50வீத இருப்பை பேணுமாறு அமைச்சர் வலியுறுத்து

லோரன்ஸ் செல்வநாயகம்



எரிபொருள் விலைகளில் இம் மாதம் திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் என எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். அதேவேளை, தேசிய எரிபொருள் 04

## ஜனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் ஜூன் மாதத்தில்

### கட்சிகள் சாராத சுயாதீன வேட்பாளராக ஜனாதிபதி ரணில்




லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடம் ஜூன் மாதத்தில் நடத்தப்படலாம் என முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவருமான ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 04

## நோர்வே தூதரகத்திற்கு நேற்றுடன் பூட்டு

### புதிய செயற்பாடுகள் புதுடில்லியில்



இலங்கையிலுள்ள நோர்வே தூதரகம் நேற்று (31) முதல் மூடப்பட்டுள்ளது. வெளிநாட்டு தூதரகப் பணிகளின் வலையமைப்பில் ஏற்பட்டுள்ள கட்டமைப்பு மாற்றங்கள் காரணமாக 04



03

### சீதாவாக்க ஓடிஸி சொகுசு ரயில் சேவைகள் சனிக்கிழமைகளிலும்

ஆகஸ்ட் 05 முதல் ஆரம்பிக்க நடவடிக்கை

## 1,767 பேருக்கு பார்வை வழங்கிய இலங்கையர்கள்

### உலகில் 57 நாடுகளை சேர்ந்தோர் நன்மை பெற்றனர்



இந்த வருடம் கடந்த 28 ஆம் திகதி வரை 57 நாடுகளைச் சேர்ந்த 1767 பேருக்கு பார்வை வழங்குவதற்கு இலங்கையர்கள் இக் காலப்பகுதிக்குள் பங்களித்துள்ளதாக இலங்கை 04

## பாராளுமன்றத்தை கலைத்து விடவும்

### மரிக்கார் MP கோரிக்கை விடுப்பு



பொதுஜன பெரமுன கட்சியினதும் ஐக்கிய தேசியக் கட்சியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் தொகுதிக் கூட்டங்களில் தற்போது பல விதமான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. 70 சதவீதத்துக்கு 04

### ராஜகிரிய விபத்துச் சம்பவம்;

## சம்பிக்க மீதான வழக்கு செப். 23க்கு ஒத்திவைப்பு



2016 ஆம் ஆண்டு ராஜகிரியவில் இடம்பெற்ற விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு கொழும்பு 04



















பெருந்தோட்ட மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை நினைவுகூரும் வகையில் 'வேறுபாடுகளின்றி நல்லிணக்கத்தை உருவாக்குவோம்' எனும் தொனிப்பொருளின் கீழ் கடந்த சனிக்கிழமை (29) மணிக்கு ஹற்றன் DKW மண்டபத்தில் விசேட நிகழ்வொன்று நடைபெற்றது.

அப்செக் ஸ்ரீ லங்கா மலையக சமூக செயல் நிலையத்தின் ஏற்பாட்டில் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டத்தின் அனுசரணையில் பெருந்தோட்ட பிரஜைகள் மத்தியில் தேசிய மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதின் ஊடாக தேசிய நல்லிணக்கத்தை உறுதி செய்தல் எனும் மகுடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும,

IDM நேஷன்ஸ் கெம்பஸின் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவரும், சர்வதேச இசைக்கல்லூரிக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவருமான அருட்கலாநிதி எஸ்.சந்துரு பெர்ணான்டோ விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதம அதிதியாக சட்டத்தரணியும், தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டுச் செயறிட்ட பிரதிப் பணிப்பாளர் மா. திருநாவுக்கரசு,தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர்,அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் எஸ். சந்தனம்,திட்டமிடல் முகாமையாளரும், நிகழ்வின் பிரதம ஒருங்கிணைப்பாளருமான ஏ.டி.முரளீஸ்வரன் உட்பட அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.











முஹர்ரம் புத்தாண்டு தினத்தையொட்டி மினுவாங்கொடை, கல்லொழுவை அல்அமான் முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் இணைந்து வித்தியாலய அதிபர் எம்.ரி.எம். ஆஸிம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடத்தியது.நிகழ்வில் வேவல்தெனிய அல்ஹஸன் வித்தியாலய மௌலவி ஆசிரியர் சாஹுல் ஹமீத் (கபூரி), வித்தியாலய அதிபர் ஆஸிம், மினுவாங்கொடை கல்வி வலய தமிழ் மொழிமூல ஆசிரிய ஆலோசகர் கே. சிவகணேசன், தமிழ் மொழிமூல கல்விப் பணிப்பாளர் ஏ.ஏ.எம்.ரிஸ்வி ஆகியோர் கலந்து கொண்டனர்.இந் நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் ரமழான் விடுமுறைக் காலத்தில் நடத்தப்பட்ட குர்ஆன் ஓதல் மற்றும் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# சேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை மைதானத்தில் மாபெரும் பரிசளிப்பு விழா



மாளிகாசேனை ஸேம் ரிபாய் ஹாஜியார் தேசிய பாடசாலை அதிபர் எஸ்.ஆர் குமார் தலைமையில் தினகரன் பத்திரிகையின் 91 ஆவது ஆண்டை முன்னிட்டு 'இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் மாபெரும் நிகழ்வு பேருவளை மாளிகாசேனை சேம் ரிபாய் ஹாஜியார் விளையாட்டு மைதானத்தில் வியாழக்கிழமை (3) 3.00 மணிக்கு நடைபெறவுள்ளது.



அதிபர் எஸ்.ஆர் குமார்



ஒருங்கிணைப்பாளர்
சிரேஷ்ட ஊடகவியலாளர்
பீ.எம்.முக்தார்



ஏற்பாட்டுக்குழுத் தலைவர்
சமூக சேவையாளர்
எம். பாஸி ஸுபைர்

அத்தோடு பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி,பேருவளை மாளிகாசேனை கிங் பிஷர் கிரிக்கெட் அணிக்கும் பேருவளை மருதான கிரேட் போய்ஸ் அணிக்கும் இடையிலான 5 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழா சமூக சேவையாளர் எம். பாஸி ஸூபைரின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ளது.





அகலவத்தை தொகுதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுக்கூட்டமும் மக்கள் சந்திப்பும் அண்மையில் நடைபெற்றது. பொதுஜன பெரமுனவின் அகலவத்தை பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சன்ஜீவ எதிரிமான்ன தலைமையில் இது நடைபெற்றது. இதில் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சாகர காரியவசம் மற்றும் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, காமினி லொக்குகே, இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, அனுர பெஸ்குவல் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

# நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்ப் போட்டி





நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைப்பந்தாட்டப் போட்டி தர்கா நகர் புட்சல் விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. தர்கா நகர் லிவர்பூல் (master side) பிரிவுக்கும் லிவர்பூல் (youth side) பிரிவுக்குமிடையிலான போட்டியில் Master side பிரிவு 3-1 என்ற கோல் வீதத்தில் வெற்றி பெற்று நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. பரிசளிப்பு விழாவில் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பேருவளை உதைப்பந்தாட்ட சங்க பொருளாளர் ஏ.ஜே.எம்.அக்பர், கழக ஆலோசகர் எம்.ஆர்.எம்.ஹில்மி மற்றும் லியாஸ்தீன் ஹாஜியார் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்: பீ.எம். முக்தார்)

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 ஓகஸ்ட் 1 செவ்வாய்க்கிழமை

தினகரன்
THINAKARAN


தொழுகை நேரம்
சுபஹ் - 04.44
லுஹர் - 12.18
அஸர் - 03.39
மஃரிப் - 06.31
இஷா - 07.44

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஆடி 16
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



நுகர்வோர் விலைச்சுட்டிக்கிணங்க

## நகர்ப்புற சமூகத்தின் பணவீக்கம் 6.3% மாக குறைவு

குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவிப்பு

*லோரன்ஸ் செல்வநாயகம்*

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டிக்கு இணங்க கொழும்பு நகர்ப்புற சமூகத்தின் பண வீக்கம் இந்த ஜுலை மாதத்தில் 6.3 வீதமாக குறைவடைந்துள்ளதாக குடிசன புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கொழும்பு நகர்புற சமூக நுகர்வோரின் பண வீக்க வீதம் கடந்த ஜூன் மாதத்தில் 12 வீதமாக இருந்துள்ளதுடன் ஜுலை மாதத்தில் அது 6.3 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, இந்த ஜுலை மாதத்தில் உணவுப் பொருட்களுக்கான வருடாந்த பணவீக்கம் 1.4 வீதமாக குறைவடைந்துள்ளதுடன் கடந்த ஜூன் மாதத்தில் அது 4.1 வீதமாக இருந்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் ஜுலை

04

## வடக்கு, கிழக்கு உட்பட சில மாகாணங்களில் கடும் வரட்சி

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*




வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் வடமத்திய மாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நிலவும் கடும் வரட்சி காரணமாக பெருமளவு குளங்கள் மற்றும் நீர் நிலைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைவடைந்துள்ளதாக மின்சாரத்துறை பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனார்.

அதேவேளை இந்த மாகாணங்களில் மழை நீரினால் போசிக்கப்படும் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளங்கள் வரட்சியடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்த வகையில் அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் காணப்படும் குளங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அத்துடன் உடவளவை நீர்தேக்கத்தின் நீர் மட்டம் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

04



துருக்கி பாதுகாப்பு அமைச்சர் யாசர் குலரை பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தனது துருக்கி விஜயத்தின் போது சந்தித்துள்ளார். அங்கு அவர் இலங்கையில் பயங்கரவாதத்திற்கு இடமில்லை என தெரிவித்தார். பயங்கரவாதிகளை ஒழிப்பதில் இலங்கை மேற்கொண்ட நடவடிக்கையை துருக்கி பாதுகாப்பு அமைச்சர் அச் சந்தர்ப்பத்தில் பாராட்டினார்.

உதவி தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும்

# சீனா இலங்கையின் பக்கம் நின்றே செயற்பட்டுள்ளது

நீதிமன்ற கட்டடத் தொகுதி நிர்மாண ஆரம்ப நிகழ்வில் சீனத்தூதுவர்

*லோரன்ஸ் செல்வநாயகம்*



சீன அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 11 பில்லியன் ரூபா செலவில் கொழும்பு புதுக்கடையில் நிர்மாணிக்கப்படவுள்ள நீதிமன்ற கட்டட தொகுதிக்கான ஆரம்ப பணிகள் நேற்று உத்தியோகபூர்வமாக தொடக்கிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிகழ்வில் பிரதம நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயந்த ஜயசூரிய, நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ. இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன, இலங்கையிலுள்ள சீன தூதுவர் ஷி செங் கொன்ங் ஆகியோரின் பங்கேற்பில் நேற்று இந்த ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ நீதிமன்ற கட்டடத் தொகுதியை புனரமைக்கும் திட்டம் தொடர்பில் சீன அரசாங்கத்துடன் 2015 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. எனினும் நாட்டில் நிலவிய கொரோனா சூழ்நிலை பாதிப்பு மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு தாமதமாகியுள்ளது.

11 பில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாக முன்னெடுக்கப்படவுள்ளது. முதலாவது கட்டத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத் தொகுதி, இரண்டாம் கட்டத்தின் கீழ் உச்ச நீதிமன்ற தொகுதியும் மறுசீரமைப்பு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிக்குள் இந்த திட்டத்தை நிறைவுசெய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய சீன தூதுவர் ஷி செங் கொன்ங் 1989 ஆம் ஆண்டு சீனாவின் நிதியுதவியுடன் இந்த நீதிமன்ற கட்டடத் தொகுதி ஆரம்பிக்கப்பட்டதுடன் அதை இரண்டு தடவைகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

அதனையடுத்து 30வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் அந்த கட்டடத் தொகுதிக்கு புதுப்பொலிவை ஏற்படுத்தும் வகையில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை பலப்படுத்தும் வகையில் வரலாற்று ரீதியாக பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை, இலங்கைக்கு உதவி தேவைப்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சீனா, இலங்கைக்கு உதவியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுவர் வைத்தியசாலையில் குழந்தை உயிரிழந்த சம்பவம்

பாரபட்சமற்ற விசாரணைக்கு GMOA அழைப்பு

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிறுநீரக சத்திரசிகிச்சைக்கு பின்னர் உயிரிழந்த மூன்று வயது சிறுவனின் மரணம் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) சுகாதார அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளது.

“பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் ஆகிய இரு தரப்பினரும் விரிவான பகுப்பாய்வு இல்லாமல் சம்பவம் குறித்து முன்கூட்டியே முடிவுகளை எடுப்பது நியாயமற்றது என GMOA ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சாமில் விஜேசிங்க தெரிவித்தார்.

“எனவே, மரணத்திற்கான உண்மையான காரணத்தை கண்டறிவதற்காக, சம்பவம் குறித்து உடனடியாக விசாரணை நடத்துவது அவசியம் என்றும் வைத்தியர் வலியுறுத்தியுள்ளார்.

குழந்தை தீவிர சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை கண்டறிந்து, இடதுபுற சிறுநீரகத்தை அகற்ற அறிவுறுத்திய மருத்துவர்களின் அலட்சியம் காரணமாக குழந்தை உயிரிழந்துள்ளதாக குறித்த குழந்தையின் பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இருந்தபோதிலும், அறுவை சிகிச்சையின் போது ஆரோக்கியமான வலது சிறுநீரகமும் அகற்றப்பட்டதாக மருத்துவர்கள் பின்னர் தெரிவித்ததாக குழந்தையின் பெற்றோர் கூறுகின்றனர்.

மேலும், எந்த சிறுநீரகமும் செயற்படாத குழந்தைக்கு, தகுந்த சிறுநீரகம் மாற்றப்படும் வரை, ஹீமோடையாலிசிஸ் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, தீங்கு விளைவிக்கும் கிருமியால் குழந்தை இறந்துள்ளது.

உயிரிழந்த குழந்தை கொட்டாஞ்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தது டன், லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வெள்ளிக்கிழமை (28) உயிரிழந்துள்ளது.

ஜப்பானிய அரசின் ஆதரவுடனான

## அபிவிருத்தித் திட்டங்கள் மீண்டும் முன்னெடுப்பு

**விரைவில் மீள ஆரம்பிக்கவுள்ளதாக ஜனாதிபதியுடனான சந்திப்பில் இணக்கம்**

ஜப்பானிய அரசின் ஆதரவுடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு இடை நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை விரைவில் மீள ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜப்பானின் அமைச்சரவை அலுவலக இராஜாங்க அமைச்சர் புஜிமாரு சடோஷி (FUJIMARU Satoshi) மற்றும் பிராந்திய மறுமலர்ச்சி மற்றும் கண்காணிப்பு மறுசீரமைப்புக்கான முன்னாள் இராஜாங்க அமைச்சர் யமமோட்டோ கோசோ(YAMAMOTO Koza) ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நேற்று (31) ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர். ஜப்பானிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் இந்நாட்டில் அமுல்படுத்தப்பட்டு தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை மக்களுக்குப் பயன் தரும் வகையில் மீள ஆரம்பிப்பது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

04

விகாராதிபதி ரத்தேகொட தேரர் மீதான தாக்குதல்

## சட்ட விரோத மதுபானத்துடன் சந்தேக நபர் கைது

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*



மில்லனிய ரத்தேகொடை விகாரைக்குள் பிரவேசித்து விகாராதிபதி ரத்தேகொட பியரத்ன தேரர் மற்றும் அவரது உதவியாளர் மீது தாக்கல் மேற்கொண்டு தலைமறைவாகியிருந்த போதைப் பொருள் வர்த்தகரை கைது செய்துள்ளதாக மில்லனிய பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருடன் மதுபானம் தயாரிப்பதற்காக பயன்படுத்தப்படும் 5000 மில்லிலீற்றர் ஸ்பிரிட்டையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேக நபரின் தாக்குதலால் பாதிக்கப்பட்ட விகாராதிபதி ஹல்தொட்ட ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர் ஹொரணை அரசாங்க வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேக நபர்

04

## சீதாவாக்க ஓடிஸி சொகுசு ரயில் சேவைகள் சனிக்கிழமைகளிலும்

ஆகஸ்ட் 05 முதல் ஆரம்பிக்க நடவடிக்கை



சீதாவாக்க ஓடிஸி சொகுசு ரயில் ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதல் சனிக்கிழமைகளில் செயற்படும் என இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்ட சீதாவாக்க ஓடிஸி கொழும்புக்கும் அவிசாவளைக்கும் இடையில் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் இயங்கி வருகிறது. எவ்வாறாயினும் அதிக தேவை காரணமாக இலங்கை ரயில்வே மற்றும் மேல் மாகாண சுற்றுலா சபை ஆகியன எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி முதல் சனிக்கிழமைகளில் ‘ஷனிதா சீதாவாக்க ஓடிஸி’ என்ற பெயரில் ரயிலை இயக்குவதற்கு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பிரபலமான சுற்றுலாத்தலமான சீதாவாக்கவை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த ரயில் தொடங்கப்பட்டது. சீதாவாக்க ஓடிஸியை பயன்படுத்தும் நபர்கள் சீதாவாக்க தாவரவியல் பூங்கா, கலடுவாவ நீர்த்தேக்கம், லபுகம நீர்த்தேக்கம், ரன்முடு எல்ல மற்றும் குமரி எல்ல உள்ளிட்ட சுற்றுலா தலங்களின் ஊடாக செல்ல முடியும்.

## பெலியத்தை ஆயுர்வைத்தியசாலைக்கு ஐம்பது வருடம் பூர்த்தி; சேவையாற்றியோரும் ஆளுநரால் கௌரவிப்பு

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*



பெலியத்தை மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது வருடம் நிறைவடைவதையிட்டு ஆயுர்வேத கண்காட்சியும், ஊழியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலீ கமகே தலைமையில் (28) வெகுவிமரிசையாக நடைபெற்றது.

மேற்படி நிகழ்வை முன்னிட்டு வைத்தியசாலை நிர்வாகத்தினால் பிரதேசத்தில் பல்வேறு நலன்புரி நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதில் இலவச மருத்துவ முகாம், இரத்த தான நிகழ்வு, ஆயுர்வேத வைத்தியதுறையின் சிறப்பையும் முக்கியத்துவத்தினையும் எடுத்துக் காட்டும் கண்காட்சி போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றதோடு இவற்றில்

04

## தமிழரசுக் கட்சி வரலாற்றில் மட்டு. மாவட்டத்திற்கு கௌரவம்

73 வருட கால வரலாற்றில் புதிய மாவட்ட நிர்வாகிகள்

இலங்கை தமிழரசுக் கட்சியின் 73 ஆண்டு கால வரலாற்றில் முதன் முதலாக மட்டக்களப்பு மாவட்ட புதிய நிர்வாக தெரிவு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தலைமையில் (30) நடைபெற்றது. சாணக்கியன் எம்.பியின் முயற்சியில் மட்டக்களப்பில் வட்டாரக்கிளை, பிரதேசக்கிளை மற்றும் தொகுதிக்கிளை முறையே அமைக்கப்பட்டு மாவட்ட நிர்வாக தெரிவு இடம் பெற்றது.

மேலும் இந்த தெரிவு திருகோணமலை மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் குகதாசன், செல்வேந்திரன், நடராசா, மற்றும் மண்முனை தென்மேற்கு பிரதேச முன்னாள் தவிசாளர் சி. புஷ்பலிங்கம் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்றது.

தலைவராக இரா. சாணக்கியன் எம்.பியும் செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன், பொருளாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ. யோகேஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

உபதலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரனும் உப செயலாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தி. சரவணபவன் உட்பட 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

அநுர குமார திஸாநாயக்க, ரில்வின் சில்வா உள்ளிட்ட தரப்பினருக்கு

## கொழும்பின் பல முக்கிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிப்பு

மஜிஸ்திரேட் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

கொழும்பின் பல முக்கிய பகுதிகளில் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்வதை தடை செய்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க அக்கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா உள்ளிட்ட கட்சி தரப்பினருக்கு எதிராக நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது.

நேற்றைய தினம் மதியம் 12 மணி முதல் பிற்பகல் 6 மணி வரை நடைமுறைக்கு வரும் வகையில் இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் கொழும்பு கோட்டை பொலிஸார் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றம் இத்தடையுத்தரவைப் பிறப்பித்தது.

அதற்கிணங்க ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு, மத்திய வங்கி, பொலிஸ் தலைமையகம், கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து சிடிஓ முற்சந்தி வரையிலான ஒல்கொட்

04

### நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 218.30 | 229.86 |
| கனடியன் டொலர் | 243.55 | 256.14 |
| யூரோ | 357.10 | 374.17 |
| ஜப்பான் யென் | 2.3040 | 2.4114 |
| சிங்கப்பூர் டொலர் | 242.85 | 255.04 |
| ஸ்டர்லிங் பவுன் | 417.90 | 436.25 |
| சுவிஸ் பிராங்க் | 372.53 | 393.13 |
| அமெரிக்க டொலர் | 322.84 | 335.89 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 873.71 | கட்டார் ரியால் | 90.39 |
| குவைத் டினார் | 1073.32 | சவூதி ரியால் | 87.82 |
| ஓமான் ரியால் | 855.52 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 89.67 |

## கொழும்பின் பல முக்கிய பகுதிகளில்...

03ஆம் பக்கத் தொடர்

மாவத்தை லோட்டஸ் வீதி, யோர்க் வீதி, வங்கி வீதி, சத்தம் வீதி, முதலிகே மாவத்தை, பாரோன் ஜயதிலக்க மாவத்தை, பாலதக்ஷ மாவத்தை, ஜனாதிபதி மாவத்தை மற்றும் காலிமுகத்திடல் சுற்றுவட்டத்திலிருந்து என்.எஸ்.ஏ சுற்றுவட்டத்திலிருந்து காலி வீதியில் ஜனாதிபதி செயலகம் வரையிலான காலிமுகத்திடல் சுற்றாடல் உள்ளிட்ட பகுதிகளே ஆர்ப்பாட்டத்துக்கு தடைவிதிக்கப்பட்டிருந்தன.

## ஜூலி சாங்...

தொடர்பான முக்கியமான சமூக மற்றும் அரசியல் விவகாரங்களில் அமெரிக்க அரசாங்கத்தின் கருத்துக்களை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். ஜூலி சாங் மீண்டும் அமெரிக்காவிற்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளதாகவும், டிசம்பரில் இலங்கையை விட்டு வெளியேறுவதாகவும், அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் ஜூலி சாங்கை திரும்ப அழைக்க அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும், அந்த தகவல் முற்றிலும் போலியானது எனவும் கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகமும், உறுதிப்படுத்தியுள்ளது.

## கிளிநொச்சியில்...

டக்ளஸ் தேவானந்தாவின் அறிவுறுத்தலுக்கு அமைய கடந்த சில தினங்களாக பொலிஸாரினால் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நடவடிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே, கடற்றொழில் அமைச்சரின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் வை. தவநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார். கடற்றொழில் அமைச்சரின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தில் நேற்று (31) இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த 28ம் தேதி மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைவாக, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஒத்துழைப்பு மற்றும் ஆலோசனையுடன், சட்டவிரோதமான மணல் அகழ்வை தடுப்பதற்கும் சட்டவிரோதமான முறையில் மணலை பதுக்கி வைத்திருப்பவர்களிடமிருந்து மீட்பதற்குமான விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் முதல் கட்டமாக நேற்று முன்தினம் (30) முரசுமோட்டை ஊரியான் கண்டாவளை போன்ற பகுதிகளில் சுமார் 80 லோட் உழவு இயந்திரத்தின் மணல் கைப்பற்றப் பட்டது.

பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ளதுடன், கைப்பற்றப்படுகின்ற மணலை நீதிமன்றில் பாரப்படுத்தி, நீதிமன்றின் அனுமதியுடன் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு நியாயமான விலையில் பகிர்ந்தளிப்பதற்கு அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசித்து வருகின்றார்" என்று தெரிவித்தார்.

## மாகாண மட்டத்தில்...

என கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்

விஞ்ஞானம், தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் ஆகிய பாடங்களுக்கு புதிய பட்டதாரிகளை இணைத்து கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மாகாண மட்டத்திலேயே முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் மற்றும் அதிபர்களை இணைத்துக் கொள்வது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் சம்பந்தமாக கருத்து தெரிவித்துள்ள அமைச்சர், நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ள தடையுத்தரவு காரணமாக அதற்கான நடவடிக்கைகள் தாமதமாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

2024 ஆம் கல்வியாண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது.

அதேவேளை, அடுத்த வருடத்திற்கான ஐந்தாமாண்டு புலமைப் பரிசில், கல்வி பொதுத் தராதர சாதாரண தர மற்றும் உயர்தரப் பரீட்சைகள் ஆகிய மூன்று பரீட்சைகளையும் அடுத்த ஆண்டுக்குள்ளேயே நடத்தி முடிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளன.

அத்துடன் அடுத்த ஆண்டுக்கு தேவையான பாடசாலை புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரசாங்க அச்சக கூட்டுத்தாபனத்தில் தற்போது அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தனியார் பிரிவிலும் டெண்டர் கோரப்பட்டு பாடப்புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் எதிர்வரும் நவம்பர் மாதத்திற்குள் தேவையான அனைத்து பாட புத்தகங்களையும் அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இந்திய தூதுவரை...

பிரகாரம் இந்த சந்திப்புக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் மின்னஞ்சல் ஊடாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியப் பயணத்தை முடித்து நாடு திரும்பியுள்ள நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுடன் இந்திய தூதுவர் அவசர சந்திப்பை நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதமர் மோடி வெளியிட்ட கருத்துக்கள், சர்வகட்சிக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் மற்றும் இந்திய பிரதமரை நேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏற்கனவே விடுத்திருந்த கோரிக்கையை மீளாய்வு செய்தல் உட்பட தமிழ் மக்கள் சமகாலத்தில் எதிர்கொண்டுள்ள பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாக அறிய முடிந்தது.

## 887,653 குடும்பங்களுக்கு...

சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை ஆராய்வதற்கான நடவடிக்கைகள் நிறைவுறும் வரை அவர்களுக்கு இந்த சமுர்த்தி கொடுப்பனவை பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனைகளை பரிசீலிக்கும் நடவடிக்கைகள் விரைவாக இடம்பெற்றுவருகின்றன. அத்துடன் அந்த நடவடிக்கைகள் நிறைவுற்றதும் புதிய விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது 1,792,265 குடும்பங்கள் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்றுள்ளதுடன் அவற்றில் 9,046,612 குடும்பங்கள் நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்கு புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு 20 இலட்சம் குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மேன்முறையீடு மற்றும் ஆட்சேபனை தொடர்பில் பரிசீலணை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த இலக்கை அடையமுடியுமென்றும அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று தற்போது வயதுமுதிர்ந்தோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்கள் ஆகியோரில் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வோருக்காக இதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த வகையில் அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும். அந்த வகையில் வயதுமுதிர்ந்தோருக்கான கொடுப்பனவுகள் தபால் நிலையங்கள் மூலமும் சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்கள் மூலமும் வழங்கப்படும்.

அதேவேளை தற்போது மத ஸ்தாபனங்களிலுள்ள மத குருமார்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் தங்கியிருப்போர் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் மற்றும் அங்கவீனர்களுக்கான மத்திய நிலையங்களிலுள்ளோர் என 11,660 நபர்களுக்கு வழமையாக வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 65 வகையான...

நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அது தொடர்பில் சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் சமன் ரத்நாயக்க தெரிவிக்கையில், இந்த வருடத்தின் கடந்த ஏழு மாதங்களில் தரம் தொடர்பான சிக்கல்கள் காரணமாக 65 மருந்துகளை பாவனையில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். இந்த 65 வகை மருந்து பொருட்களில் இந்தியாவின் கடன் உதவி திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட மருந்தும் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் தேசிய ரீதியில் தயாரிக்கப்படும் ஆறு மருந்துகளும் அதில் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில மருந்துகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள தரம் தொடர்பான சிக்கல்களை நிவர்த்தி செய்யும் வகையில் சுகாதார அமைச்சர் என்றால் விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 13,000 பேருக்கு...

மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டுள்ளன.

கடந்த வாரம் இலங்கைக்கு வருகை தந்த மேற்படி நிறுவனங்களில் பிரதிநிதிகள் குழு அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் தமது பயணிகள் கப்பல்களில் உள்ள தொழில் வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடினர். ஹோட்டல் முகாமைத்துவ பயிற்சிக்காக நாட்டில் உள்ள வசதிகள் குறித்து திருப்தியடைவதாக தெரிவித்துள்ள அமைச்சர், பயிற்சிக்கான பாடத்திட்டமும் அந்த நிறுவனங்களால் வழங்கப்படவுள்ளது. அதற்கமைய, அடுத்த சில மாதங்களுக்குள் பயிற்சிக்கு மாணவர்களை சேர்த்துக்கொள்ள அமைச்சு தயாராகி வருகிறது. இது தொடர்பாக, கப்பல் நிறுவனங்களுக்கும் அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் கையெழுத்திடப்பட உள்ளது. இதேவேளை வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை இலக்காக கொண்டு தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சி நெறிகளில் சுமார் 5000 பேர் கலந்து கொண்டுள்ளனர்.

## தேசிய கீதத்தின்...

இவ்வாறு மாற்றிப் பாடுவது அரசியலமைப்புக்கு எதிரான செயற்பாடாகும் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என மேற்படி அமைச்சு தெரிவித்துள்ளதுடன் அந்த சம்பவம் தொடர்பில் விரைவான விசாரணையை மேற்கொள்ளப் போவதாகவும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் கே .டி .என். ரஞ்சித் அசோக தெரிவித்துள்ளார்.

நான்காவது லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் விளையாட்டுத் தொடரின் ஆரம்ப விழா நேற்று முன்தினம் கொழும்பு ஆர் . பிரேமதாச விளையாட்டரங்கில் இடம்பெற்றது.

அதன் போது அதன் ஆரம்ப நிகழ்வில் தேசிய கீதம் இசைப்பதற்கான சந்தர்ப்பம் பாடகி உமாரா சிங்ஹவங்சவுக்கு வழங்கப்பட்டிருந்தது.

அந்த பாடலை இசைக்கும் போது அவர் ஸ்ரீலங்கா மாதா என்பதற்கு பதிலாக தவறான உச்சரிப்பில் ஸ்ரீலங்கா மஹதா என சிங்கள மொழியில் இந்தப் பாடலை பாடியுள்ளார்.

சர்வதேச கவனத்தை ஈர்க்கும் நிகழ்வு ஒன்றின் போது தேசிய கீதத்தை மாற்றிப் பாடியுள்ளமை கவலைக்குரியதாகும் என்றும் அதேவேளை, அந்த விடயம் தொடர்பில் விரைவான விசாரணைகள் இடம்பெறும் என்றும் பொது நிர்வாக அமைச்சு அறிக்கையொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

தேசிய கீதத்தின் ஒரு சொல்லையோ அல்லது ஒரு கொமா வையோ மாற்றி அமைக்க முடியாது என அரசியலமைப்பு குறிப்பிடுகின்றது. முன்னாள் ஜனாதிபதி ஜே .ஆர். ஜெயவர்தன 1978 அரசியலமைப்பில் அதனை சட்டமாக்கியுள்ளார்.

அதற்கிணங்க இந்த தேசிய கீதத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக் கொள்வதுடன் 83 வது அரசியலமைப்பின்படி சர்வஜன வாக்கெடுப்பும் அவசியமாகும் என சட்டம் தெரிவிக்கின்றது.

அந்த வகையில் தேசிய கீதத்தின் வரிகள் மற்றும் அதன் பின்னணி இசை ஆகியவை மாற்றி இசைக்கப்பட்டமையானது நாட்டின் நற்பெயருக்கு களங்கம் என்றும் அது அரசியலமைப்பை மீறும் செயற்பாடாகும் என்றும் சட்டத் துறை அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மஹாநாம : நாட்டின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் மூன்று முக்கிய விடயங்கள் உள்ளன. அவை நாட்டின் பெயர், நாட்டின் தேசிய கீதம் மற்றும் நாட்டின் தேசிய கொடியுமாகும். அந்த வகையில் ஆனந்த சமரகோன் மிக கவனமாக அர்ப்பணிப்புடன் அதனை உருவாக்கியுள்ளார்.

அந்த வகையில் இந்த விடயம் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

## கோழி இறைச்சி...

விக்ரமசிங்க தீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் கொழும்பில் நடைபெற்ற வாழ்க்கைச் செலவு தொடர்பான விசேட கலந்துரையாடல் நிகழ்வின் போதே ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் நளின் பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், கோழி இறைச்சிக்கு சந்தைகளில் நிலவும் அதிகரித்த விலை காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அந்தப் பாதிப்பை குறைக்கும் வகையிலேயே அரசாங்கத்தினால் கோழி இறைச்சியை இறக்குமதிசெய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தின் மூலம் கோழி இறைச்சி வர்த்தக சந்தைகளில் விலை கட்டுப்பாடு ஏற்படாவிட்டால் எதிர்காலத்திலும் நாட்டு மக்களுக்குத் தேவையான கோழி இறைச்சியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை உற்பத்தியை அதிகரிப்பதன் ஊடாக நாட்டு மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விலையில் கோழி இறைச்சி மற்றும் முட்டைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறு மேற்படி கலந்துரையாடலின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விவசாயத்துறை அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

## போலி கடவுச்சீட்டுகளில்...

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளனர். நேற்றுக்காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெளிச்செல்லும் முனையத்தில் விமானத்திற்குள் பிரவேசிக்கும் கடைசி நுழைவாயிலில் வைத்து அந்த அதிகாரிகள் மேற்படி ஐந்து இளைஞர்களையும் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி இளைஞர்களுள் ஒருவர் புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடையவர். அவர் விமான நிலையத்தில் அனைத்து சோதனைகளையும் நிறைவுசெய்துகொண்டு நேற்றைய தினம் அதிகாலை 4.55 க்கு கட்டார் விமான சேவைக்கு சொந்தமான விமானத்தில் பயணித்து அங்கிருந்து ஒஸ்ரியாவுக்கு பயணிப்பதற்கு தயாராகியிருந்ததாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாண பிரதேசத்தைச் சேர்ந்த மற்றும் நான்கு இளைஞர்கள் இலங்கை விமான சேவைக்குச் சொந்தமான யு.எல்.101 ஆம் இலக்க விமானத்தில் காலை 7.20 மணிக்கு புறப்பட்டு மாலைதீவுக்குச் சென்று அங்கிருந்து ஜேர்மனிக்குச் செல்வதற்கு தயாராகியிருந்ததாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும் அவர்கள் சமர்ப்பித்த அனைத்து ஆவணங்களையும் மீண்டும் ஒரு தடவை பரிசோதனை செய்த குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் அவர்கள் வசமிருந்த விமான கடவுச்சீட்டு மற்றும் விமான டிக்கட்டுக்கள் போலியாக தயாரிக்கப்பட்டவை என்பதை இறுதியில் கண்டுபிடித்துள்ளனர். அவர்கள் ஐவரும் கைதுசெய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்கள பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மேற்படி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## நகர்ப்புற சமூகத்தின்...

03ஆம் பக்கத் தொடர்

மாதத்தில் உணவு அல்லாத பொருட்களின் வருடாந்த பணவீக்கம் 10.5 வீதமாக குறைவடைந்துள்ளதுடன் அது கடந்த ஜூன் மாதத்தில் 16.2 வீதமாக இருந்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## வடக்கு, கிழக்கு உட்பட...

03ஆம் பக்கத் தொடர்

இதன் காரணமாக தென் மாகாணத்தின் சில பகுதிகளில் ஒன்றிலிருந்து மூன்று மணித்தியாலங்கள் வரை மின்துண்டிப்பை மேற்கொள்ள நேருமென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை நிலவும் வரட்சியான காலநிலை தொடரும் நிலையில் எதிர்வரும் பெரும்போகம சாத்தியமற்று போகுமாயின் நாட்டில் பெரும் உணவுத் தட்டுப்பாடு ஏற்படலாமென்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அபிவிருத்தித் திட்டங்கள்...

03ஆம் பக்கத் தொடர்

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயல்முறை நிறைவடைந்த பின்னர் குறித்த திட்டங்கள் அனைத்தையும் மீண்டும் ஆரம்பிக்க இரு தரப்பினரும் இணக்கம் தெரிவித்ததுடன், இலங்கையில் உள்ள ஜப்பானிய தூதரக அதிகாரிகளை இணைத்து இது தொடர்பான திட்டங்கள் குறித்து ஆராயவும் முடிவு செய்யப்பட்டது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி (Mizukoshi Hideaki) உள்ளிட்ட தூதுக் குழுவினர், ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## சட்ட விரோத மதுபானத்துடன்...

03ஆம் பக்கத் தொடர்

நேற்று முன்தினம் 30ஆம் திகதி இரவு 10 மணியளவில் மேற்படி விகாரைக்குள் புகுந்து அங்கு தங்கியிருந்த இளம் தேரர்களை அங்கிருந்து வெளியேற்றி விகாராதிபதியை தூற்றியுள்ளதுடன் அவரின் கன்னத்தில் அரைந்து கழுத்தை நெறித்து தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## பெலியத்தை...

03ஆம் பக்கத் தொடர்

பெரும் திரளானோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர். கொரோனா தொற்று முழு நாட்டையும் ஆட்கொண்டிருந்துபோது ஆயுர்வேத வைத்தியத்துறையின் ஊடாக ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த 1500 நோயாளர்களக்கு ஆயுர்வேத சிகிச்சை அளிக்கப்பட்டது. இவர்களை பாராட்டி கௌரவிக்கும் முகமாக வைத்தியசாலை அதிகாரிகள் ,ஓய்வுபெற்ற அதிகாரிகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் அன்றையதினம் ஆளுநர் தலைமையில் வெகுவிமரிசையாக இடம்பெற்றது.

## தாமரை கோபுரத்தில்....

10 ஆயிரம் விளையாட்டு வீரர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக தாமரைக் கோபுரத்தின் முகாமைத்துவ பொறுப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அந்த நிறுவனத்துடன் தொடர்புடைய 50 ஆயிரம் விளையாட்டு வீரர்கள் உலகளாவிய ரீதியில் காணப்படுவதுடன் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு 'கோ பங்கி' நிறுவனம் மற்றும் தாமரைக் கோபுரம் முகாமைத்துவம் ஆகியன இணைந்து ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளன என்றும் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

## விசாரணையிலிருந்து ...

செல்லுபடியற்றதாக்கி உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்திருந்த மனுவை விசாரணை செய்யும் ஐவரடங்கிய நீதிபதிகள் குழாமிலிருந்து நீதிபதியொருவர் விலகிக் கொண்டுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நேற்று அறிவித்துள்ளார்.

நீதிபதி டீ.என்.சமரகோன் பெயரிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க மேற்படி மனு நிஸ்ஸங்க பந்துல கருணாரத்ன, சோஹித ராஜகருணா, மேனகா விஜேசுந்தர, தம்மிக கணேபொல மற்றும் டீ.என். சமரகோன் ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் ஒக்டோபர் மாதம் 16, 17, 18 மற்றும் 20 ஆம் திகதிகளில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தை தடுப்பது தொடர்பில் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்திருந்தும் அதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் மனிதப் படுகொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் அருட் தந்தை சிறில் காமிமினி உள்ளிட்ட இருவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக கொழும்பு கோட்டை மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறைப்பாட்டை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நோர்வே தூதரகத்திற்கு...

இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நோர்வே அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது. அதன்படி கொழும்பில் உள்ள நோர்வே தூதரகத்தின் நடவடிக்கைகள் இன்று முதல் இடைநிறுத்தப்படவுள்ளன. இலங்கைக்கும், மாலைதீவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு தேவையான ஏற்பாடுகளை இந்தியாவின் புதுடில்லியில் உள்ள நோர்வே தூதரகம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தல்...

கொழும்பு தேர்தல் தொகுதி மக்கள் பேரணிக் கூட்டம் கொழும்பு முகத்துவாரம் பகுதியில் இடம்பெற்றதுடன் அந்த கூட்டத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் நடத்தப்படும் என்றும் அந்த தேர்தலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விரிவான அரசியல் கூட்டணியாக கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன மற்றும் எந்தக் கட்சியையும் சார்ந்திராத ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க உள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அடுத்த மாதம்...

அனுமதிப் பத்திரமான கிவ். ஆர். முறைமையை முழுமையாக இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனும் மற்றும் ஏனைய தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் அந்த முறைமையை முழுமையாக இல்லாதொழிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் தொடர்பில் கிவ்.ஆர். முறைமையை அறிமுகம் செய்து ஒரு வருட காலம் நிறைவடைந்துள்ள நிலையில் நேற்று முன்தினம் வரை 6,527,684 வாகனங்கள் அந்த முறைமையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## 1,767 பேருக்கு...

கண் மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது. ஜப்பான், எகிப்து, பாகிஸ்தான், தாய்லாந்து, மலேசியா, சிரியா உள்ளிட்ட 57 நாடுகளின் 117 நகரங்களில் பார்வையற்றோருக்கான கண்களை இலங்கையர்கள் தானம் செய்துள்ளதாக இலங்கை கண் மருத்துவ சங்கத்தின் சிரேஷ்ட முகாமையாளர் ஜகத் சமன் மாதராராச்சி தெரிவித்துள்ளார்.

## பாராளுமன்றத்தை...

அதிகமான தொகுதி கூட்டங்களை நிறைவு செய்துள்ளதாகவும் அடுத்த தேர்தல்களில் தமது கட்சியே வெற்றி பெறும் என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறுகிறார். அவ்வாறானால் பாராளுமன்றத்தை கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்லுமாறு நாம் கூறுகிறோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் கோரிக்கை விடுத்தார்.

## சம்பிக்க மீதான...

மேல் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பலல்ல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க நீதிமன்றில் ஆஜராகியபோது, இந்த வழக்கின் அடிப்படையான இதேபோன்ற மற்றுமொரு வழக்கு தொடர்பாக தனது கட்சிக்காரர் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

உயர் நீதிமன்ற விசாரணைகளை இடைநிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளதாக சட்டத்தரணி தெரிவித்தார். குறித்த வழக்கு தொடர்பில் பிரதிவாதி மேன்முறையீட்டு நீதிமன்றில் மற்றுமொரு மேன்முறையீட்டையும் தாக்கல் செய்துள்ளதாக சட்டத்தரணி மேலும் தெரிவித்தார்.

# ஆண்டவரின் உருமாற்ற திருவிழா

## ஆகஸ்ட் 6 ஆம் திகதி

நம் ஆண்டவரின் உருமாற்றத் திருவிழாவைக் கொண்டாடுகிறோம். இயேசுவோடு மூன்று ஆண்டுகள் வாழ்ந்த சீடர்களில் மூவருக்கு மட்டுமே கிடைத்த ஒரு வியப்புக்குரிய அனுபவம் இந்த உருமாற்றம்.

இயேசுவின் மானிடத் தன்மை மறைந்து, அவரது இறைத் தன்மை, இறை மாட்சியை வெளிப்படுத்தப்பட்ட விவரிக்க முடியாத ஓர் அனுபவத்தை இந்த மூவரும் உயர்ந்த மலை மேலே கண்டனர்.

அத்தோடு, இயேசு இறைத் தந்தையின் அன்பார்ந்த மகன். அவருக்கு செவி மடுப்பது இறைவனுக்கே செவிமடுப்பதாகும் என்னும் இறைவனின் குரலையும் கேட்கும் பேறு பெற்றனர்.

இந்த உருமாற்றம் உடனடியாக இல்லாவிட்டாலும், இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் அவர்களின் இறைநம்பிக்கையை ஆழப்படுத்த உதவியது.

இயேசு இறைமகனாய், மாட்சிமை நிறைந்தவராய் இருந்தும்கூட, இறைத் திருவுளத்துக்குப் பணிந்து அனைத்தையும் துறந்து, எளிய மானிடராய் வாழ்ந்தார் என்னும் உண்மையை இந்தச் சீடர்கள் எத்தனையோ நாள்கள் எண்ணி, எண்ணி வியந்திருப்பர். தமது பணியில் உறுதிப்படுத்தப்பட்டிருப்பர்.

இயேசு தோற்றம் மாறிய நிகழ்ச்சியை மாற்கு, மத்தேயு, லூக்கா ஆகிய மூவரும் விவரிக்கின்றனர். இந்நிகழ்ச்சியை விவரிப்பதில் பழைய ஏற்பாட்டு உருவகங்கள் பல பயன்படுத்தப்பட்டுள்ளன.

மலை, கதிரவனைப்போல் ஒளிரும் முகம், ஒளிமயமான மேகம், மேகத்திலிருந்து வரும் குரல், மோசேயும் எலியாவும் தோன்றுதல் போன்ற உருவகங்கள் ஆழ்ந்த பொருளை உணர்த்துகின்றன. அதாவது மோசே சீனாய் மலையில் ஏறிய போது கடவுள் அவரோடு பேசிய நிகழ்ச்சியின் எதிரொலிப்பு இங்கே உள்ளது. மேகம் என்பது கடவுளின் உடனிருப்பைக் குறிக்கும் அடையாளம். மோசே திருச் சட்டத்தையும் எலியா இறைவாக்கையும் குறிக்கின்றார்கள். இயேசு "திருச் சட்டத்தையும் இறைவாக்குகளையும் அழிக்கவல்ல, அவற்றை நிறைவேற்றவே வந்தார்" என்னும் செய்தியை மத்தேயு ஏற்கெனவே அறிவித்தார் (காண்க: மத் 5:17). வானிலிருந்து வந்த குரல் இயேசுவைக் கடவுளின் மகன் என அடையாளம் காட்டுகிறது (மத் 17:6). இயேசு வானகத் தந்தையின் "அன்பார்ந்த மகன்". நாம் அவருக்குச் செவிசாய்க்க வேண்டும் (மத் 17:6).



இயேசுவின் தோற்றம் மாறியதையும் வானிலிருந்து குரல் எழுந்து இயேசுவைக் கடவுளின் மகன் என அடையாளம் காட்டியதையும் கண்டு, கேட்டு அனுபவித்த சீடர்கள் அதன் விளைவாக முகங்குப்புற விழுகிறார்கள். அவர்களை அச்சம் மேற்கொள்கிறது. அப்போது "இயேசு அவர்களிடம் வந்து, அவர்களைத் தொட்டு, 'எழுந்திருங்கள், அஞ்சாதீர்கள்' என்றார்" (மத் 17:7). கடவுள் நம்மைத் தம்மிடம் ஈர்க்கின்ற சக்தி கொண்டவர்; நம் உள்ளம் அவரை நாடித் தேடுகிறது. அதே நேரத்தில் கடவுளின் பிரசன்னத்தில் நாம் அஞ்சி நடுங்குகிறோம். ஆனால் இயேசு நாம் அஞ்சவேண்டியதில்லை என நமக்கு உறுதியளிக்கிறார். அவரோடு நாம் இருக்கும்போது நம் வாழ்வில் அச்சம் நீங்கும்; நம் உள்ளத்தில் உறுதி பிறக்கும்.

**-அருட்திரு பவுல் லியோன்**




## மட்டக்களப்பு புனித இஞ்ஞாசியார் ஆலய திருவிழா – கொடியேற்றத்துடன் ஆரம்பம்!









புனித இஞ்ஞாசியார் மனமாற்றம் பெற்ற 500வது ஆண்டு நிறைவு விழாவினைச் சிறப்பிக்குமுகமாக மட்டக்களப்பு மறை மாவட்ட பாதுகாவலராம் புனித இஞ்ஞாசியார் ஆலயத்தின் 107 ஆவது வருடாந்த திருவிழா கடந்த 28 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி டச்பார் புனித இஞ்ஞாசியார் ஆலயமானது 1916ம் ஆண்டு அருட்பணி செபஸ்தியான் லாசராஸ் அடிகளாரினால் சிறு ஓலைக் குடிலாக ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வாலயமானது 1923ம் ஆண்டிலிருந்து புளியடிக்குடா பங்கில் வாழ்ந்துவந்த இயேசுசபைத் துறவியான அருட்பணி ஹெப்பெனோ அடிகளாரினால் பராமரிக்கப்பட்டுவந்தது. அருட்தந்தை ஹெப்பெனோ அடிகளாரை தொடர்ந்து அருட்தந்தை பீலிக்ஸ் கிலாக்சன் அடிகளாரின் பராமரிப்பில் இவ்வாலயம் காணப்பட்டது. அருட்தந்தை பீலிக்ஸ் கிலாக்சன் அடிகளார் ஓலைக் குடிசையாக இருந்த இன்னாசியார் ஆலயத்தினை 1952ம் ஆண்டு கல்லினால் கட்டி மெருகூட்டினார். இவ்வேளையில் 25.10.1952ல் மதிப்பிற்குரிய ஆயர் இக்னேசியஸ் கிளேனி அவர்கள் மறை மாவட்டத்தின் பங்குகளின் எல்லைகளை தீர்மானித்துப் புதிய பங்குகள் உருவாக்கப்பட்ட வேளையில் இஞ்ஞாசியார் ஆலயமானது புளியடிக்குடா புனித செபஸ்தியார் ஆலயத்தின் ஒரு பகுதியாக பிரகடனம் செய்யப்பட்டது.

பின்னர் 2000.01.17ம் திகதி ஆயர் அவர்களினால் கல்லடி – டச்பார் ஒரு தனிப் பங்காகவும் இயேசு சபையினரின் பராமரிப்பிற்கு உட்பட்டதாகவும் பிரகடனம் செய்யப்பட்டது. ஆலயத்தின் 107 ஆவது வருடாந்த திருவிழாவானது இவ்வாண்டும் சிறப்பாக இடம்பெறவுள்ள நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலை இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து பங்குத் தந்தை அருட்பணி லோறன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கொடியேற்றப்பட்டு, திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நவநாட் காலங்களில் தினமும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டு வருவதுடன், 05 ம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிக்கு மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

மாலை 5.00 மணிக்கு புனிதரின் திருவுருவப் பவனி, நற்கருணை ஆராதனையும் ஆசீரும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 06 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழா கூட்டுத் திருப்பலி அருட்பணி அன்ரனி றொபட் அடிகளார் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

**படம்,தகவல்: கல்லடி குறூப்நிருபர்**

# புனித வாழ்வினை கடவுளுக்காக அர்ப்பணித்த

# புனித சுவக்கீன் -அன்னம்மாள்

புனித சுவக்கீன் அன்னம்மாளின் திருவிழா கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் எல்லோருக்கும் பொன்னாளாகும்.

சுவக்கீன் அன்னம்மாள் தம்பதியர்கள் சுவக்கீன் என்றால் "இறைவனது தயாரிப்பு" என்றும், அன்னாள் என்றால் "ஆண்டவனின் அருள்" என்றும் பொருள் அன்+அம்மாள் என்பது அன்னம்மாள் ஆயிற்று யார் அந்த அன்னம்மாள்? அதனை அறிந்துகொள்ள இயேசு கிறிஸ்துவிற்கு முந்தைய மூன்றாம் தலைமுறைக்கு செல்லவேண்டும் அன்று இதே இஸ்ரேல் இருந்தது, ஏரோது கட்டிய ஆலயமும் ஜெருசலேமில் இருந்தது, யூதர்களுக்கு பெரும் குறையொன்றும் இல்லை ஒன்றே ஒன்றை தவிர அவர்கள் சுயாட்சி முறையில் ரோமருக்கு கீழே வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.

கடவுளின் மக்கள் நாங்கள்,ஜெகோவாவினை தவிர யாருக்கும் அடிமையில்லை என நம்பும் கூட்டம், ரோமரை சகித்துகொண்டிருந்தது, தங்களுக்கு வாக்களிக்கபட்ட மெசியா எனும் விடுதலை தருபவர் வருவார் என கோயிலிலே காத்திருந்தது அந்த ஜெருசலேமில்தான் சுவக்கீன், அன்னா எனும் யூத தம்பதிகள் வந்து நின்றார்கள், ஓரளவு வசதியானவர்கள்.

யூத கட்டளையினை கொஞ்சமும் அணுபிசகாமல் கடைப்பிடித்து வருபவர்கள். அக்கம் பக்கம் எல்லாம் அவர்களுக்கு அவ்வளவு மரியாதை தங்கள் வருமானத்தை மூன்றாக பிரித்து ஒரு பங்கு ஜெருசலேம் ஆலயத்திற்கும், இன்னொரு பங்கு ஏழைகளுக்கும், ஒரு பங்கு தனக்கும் என கொடுத்து தவ வாழ்வு வாழ்ந்தவர்கள் அவர்கள் கடவுளை கண்டுகொள்ளாதோருக்கு சோதனை வராது, வந்தால் ஒரே அடியில் முடிந்துவிடுவார்கள், மறுபடி எழமாட்டார்கள்.

ஆனால் கடவுளுக்கு பிடித்தமானவர்களுக்கு அடிக்கடி சோதனை வரும், குறைவைத்து அவர்களை அழவைத்து பின் வந்து "உம் பக்தியினை மெச்சினோம்" என சொல்வது எல்லா தெய்வங்களின் வாடிக்கை, யூத தெய்வமும் அதற்கு விதிவிலக்கு அல்ல ஆம், அன்னாளுக்கு குழந்தை இல்லை.

திருமணமான பெண்ணுக்கு குழந்தை இல்லை என்பதை விட என்ன பெரும் வேதனை இருக்கமுடியும்? ஆனால் அனுதினமும் தவறாமல் ஜெபித்தனர் தம்பதியர் அன்றொரு பண்டிகை நாள், யூதரின் மிக முக்கிய பண்டிகை அது, எருசலேம் ஆலயம் பக்தர்களால் நிரம்பியிருந்தது, காணிக்கையும், பலிகளும் குவிந்துகொண்டிருந்தன பெரிய குரு முன்னால் இந்த தம்பதியும் பலிசெலுத்த செல்லும்பொழுது குரு தடுத்துவிட்டார், மூட நம்பிக்கையில் வகுப்பெடுப்பது அந்நாளைய யூதம், மிக கட்டுப்பெட்டிதனமான மூடத்தனம் அன்னாள் மலடி என்றும், அது சாபம் என்றும் அதனால் அவளின் பலி ஆண்டவனுக்கு கொடுக்க சட்டத்தில் இடமில்லை என சொல்லி அவமானபடுத்தி விரட்டினார் அங்குள்ள ஆச்சாரியார் தான் வணங்கும் ஆலயத்தில், அந்த தெய்வத்தின் முன் எல்லா யூதரும் பார்க்க கதறினாள் அன்னா, இந்த தெய்வம் எப்படிபட்ட தெய்வம்? முதிர்ந்த வயதில் ஆபிரகாமுக்கு குழந்தைவரம் அருளிய தெய்வம், குழந்தையில்லா ஹன்னா என்பவருக்கு சாமுவேல் எனும் தெய்வகுழந்தையினை அருளிய தெய்வம் என்னை மட்டும் சோதிப்பதேன் என அவளும் அவள் கணவர் சுவக்கீனும்



கதறிய கதறல் அந்த ஆலயத்தின் சன்னிதானம் வரை எதிரொலித்தது அந்த கதறலிலே ஹன்னாவின் கதை அவளுக்கு நினைவுக்கு வந்தது, எந்த ஹன்னா குழந்தையின்றி தவித்து தனக்கொரு குழந்தை கிடைத்தால் கடவுளுக்கு கொடுப்பேன் என பெற்றவுடன் கொடுத்தாளோ, அப்படி எனக்கொரு குழநதை கொடுப்பின் அதை கோயிலுக்கே காணிக்கையாக்குகின்றேன் என உறுதிமொழி கொடுத்தாள் அந்த வார்த்தைக்காக காத்திருந்த கடவுள் புன்னகை புரிந்தார், இந்த ஒரு சத்தியத்தை வாங்கத்தான் அவர் அந்த விளையாட்டை நடத்திகொண்டிருந்தார்.

அதற்கு பரிசுத்தமே உருவான பிறப்பு வேண்டும், அது வ ரம்பெற்று, காண கிடைக்காத பிறப்பாய், கடவுளின் கொடையாய் இருக்கவேண்டும் என்றிருந்தது.

இயேசு பிறக்க ஒரு பரிசுத்தமான தாய்வேண்டும், அவளை நல்லபடியாக கடவுளில் வளர்க்க அவளுக்கொரு தாய்வேண்டும், இந்த யூத இனத்தில் அன்னாளை விட்டால் யார் இருக்கின்றார், இதோ அவளிடம் பிறக்கும் பிள்ளை ஆலயத்திற்கு என சத்தியமும் வாங்கியாயிற்று, இனி என்ன அருள் பாலித்துவிடலாம்.

ஆம், மரியாள் அவர்களுக்கு மகளாக பிறந்தாள், ஆனந்த கண்ணீருடன் கடவுளுக்கு நன்றி சொன்ன அன்னாள் அவளை வளர்த்தாள், குழந்தைக்கு 5 வயது ஆகும்பொழுது அந்த சத்தியம் நினைவுக்கு வந்தது, யூத தெய்வம் பொல்லாதது, அதனை ஏமாற்ற எல்லாம் முடியாது, கொடுத்துவிட வேண்டும்.

ஆனால் சிக்கல் இருந்தது, அது பெண் குழந்தை, பெண்ணடிமை சமூகமான யூதமதம் பெண்களை மதிக்காது, சபிக்கபட்டவள் பெண் என்பது அவர்கள் கொள்கை.

அதனால் ஆண் குழந்தை என்றால் கோவிலில் ஏற்று குருவாக்குவார்கள், பெண் குழந்தை என்றால் ஆலய மடத்தில் இருந்து உதவலாம், பருவம் அடைந்தவுடன் வீட்டிற்கு விரட்டிவிடுவார்கள், வீடு இல்லாவிட்டால் கொன்றும் விடவும் அவர்கள் தயார், பெண் அவர்களுக்கு அவ்வளவு வெறுப்பு அன்னாள் தன் மகளை அந்த மடத்தில் காணிக்கையாக்கினாள், அந்த பெண் மகவு மிக பரிசுத்தமான இடத்தில், மிக பரிசுத்தமாக வளர்ந்தது கிட்டதட்ட 10 வருடகாலம் மகளை பிரிந்திருந்தாள் அன்னாள், எல்லாம் கடவுளுக்காக பருவம் அடைந்து மகள் வீட்டிற்கு வந்தபின் அணைத்து கொண்டாள்.

ஆனால் ஆண்டவன் விடுவானா? கபிரியேல் தூதரை அனுப்பி அவள் பரமன் இயேசுவினை சுமக்க போகும் செய்தியினை சொல்ல சொன்னான், அப்படியே ஏற்றாள் மரியாள், அவளுக்கு அப்பொழுது 17 வயது இருக்கலாம்.

தன் மகளுக்கு பெரும் இடத்தில் திருமணம் செய்யவேண்டும் என்ற எல்லா பெண்களுக்கும் உள்ள ஏக்கம் , அன்னாவிற்கும் உண்டு, இனி என்ன செய்ய? நாம் பக்திமான்கள், ஆனால் ஊரார் விடுவார்களா? கல்லெறிந்தே கொல்வார்கள்.

அப்பொழுது சூசை எனும் வயதானவர் கடவுளால் கொண்டுவரபட்டார், அவருக்கு அன்றே 51 வயதானது, மரியாளை பற்றி சகலமும் அவருக்கு கடவுளின் தூதனால் விளக்கபட்டது, திருமணமும் முடிந்தது.

அந்த திருமண மோதிரம் அன்னாளால் கொடுக்கபட்டது, அது இன்றும் இத்தாலியில் ஒரு ஆலயத்தில் உண்டு, அந்த திருமணம் நடந்த வீடும் ஒரு ஆலயமாக நாசரேத்தில் உண்டு.

இதன் பின் மக்கள்தொகை கணக்கெடுப்பு பிரச்சினையில் மரியாள் பெத்தலஹேமிற்கு போய் இயேசுவினை பெற்று, அன்னாளிடம் காட்டினாள், முதிர்ந்தவயதில் கடவுளின் குமாரனை பேரனாக கையில் தாங்கினாள் அன்னாள்.

அன்னாள் வாழ்ந்த காலத்தில் பெரும் குருக்கள், மன்னர்கள், பேரரசர்கள், பணக்காரர்கள் இருந்தார்கள், ஆனால் இன்றுவரை நிலைபெற்றிருப்பது அன்னாளும், அவள் மகனும், அவள் பேரனும்.

அப்படிபட்ட புனிதமான வாழ்வினை அவள் கடவுளுக்காக வாழ்ந்திருக்கின்றார்.

கடவுள் அவளுக்கு அவ்வளவு பெரும் கிருபை காட்டியிருக்கின்றார், இன்றளவும் அவள் மூலம் கேட்கும் எதுவும் கிடைக்கும் என கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் நம்புகின்றார்கள், அவள் பக்தர்களே அதற்கு சாட்சி.

**-எல்.எஸ்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 16ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 முஹர்ரம் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்

கட்டாயமாகச் செய்து தீர வேண்டிய செயல்கள் என்றாலும்கூட அவற்றால் தனது பெருமை குறையுமானால் அந்தச் செயல்களைத் தவிர்த்திடல் வேண்டும்.

## புவிவெப்பமடைவதால் உணவு நெருக்கடி மோசமடையுமா?

புவிவெப்பநிலை அதிகரித்து வருகிறது. இது உறுதிப்படுத்தப்பட்டுள்ள உண்மையாக உள்ளது. அந்த வகையில் 'பூமி கொதித்துக் கொண்டிருக்கும் காலம்' என்று குறிப்பிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபை, 'காலநிலை தொடர்பில் உடனடி நடவடிக்கை அவசியம்' என்றும் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை, உலக வானிலை நிறுவனம், 'இவ் வருடம் (2023) ஜுலை பூமியின் வெப்பமான மாதம்' என்று சுட்டிக்காட்டியுள்ளதோடு கடந்த 1,20,000 ஆண்டுகளில் இந்த ஜுலைதான் மிகவும் வெப்பமான மாதமாக இருக்கிறது. உலகின் வெப்பம் மிகுந்த நாள் நடப்பு ஆண்டு ஜுலையில்தான் பதிவாகியுள்ளது' என்றும் குறிப்பிட்டுள்ளது.

பூமியின் வெப்பநிலை அதிகரித்துள்ளதன் காரணமாக உலக நாடுகள் வரட்சியையும், வெள்ளப் பாதிப்பையும் சந்தித்துள்ளன. அதன் வெளிப்பாடாக அரிசி உள்ளிட்ட தானியங்களின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஐரோப்பாவில் தானிய உற்பத்தி 60 வீதம் குறைவடைந்துள்ளதெனப் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், கடந்த ஜுலை 20 ஆம் திகதி முதல் இந்தியா அரிசி ஏற்றுமதியை இடைநிறுத்தியுள்ளது. உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் 40 சதவீதப் பங்கை வகித்துவரும் இந்தியா, 140 நாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி செய்து வருகிறது. தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அரிசி ஏற்றுமதியை இந்தியா இடைநிறுத்தியுள்ளது.

இந்த இடை நிறுத்தத்தை நீக்குமாறு கோரியுள்ள சர்வதேச நாணய நிதியம், தவறும் பட்சத்தில் உலக உணவு நெருக்கடி மோசமான கட்டத்தை அடைவதோடு அரிசி மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட உணவுப் பொருட்களின் விலைகள் பெரிதும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்திருக்கின்றது.

புவிவெப்பமாதல் அதிகரித்துள்ளதன் விளைவுகள் மற்றும் தாக்கங்கள் குறித்து உலகளாவிய ரீதியில் கவனம் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் இலங்கையின் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, 'தற்போது நிலவும் கடும் வரட்சிக் காலநிலையினால் எதிர்வரும் பெரும்போகம் சாத்தியமற்றுப் போனால் பெரும் உணவுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்க நேரிடும். நாட்டில் அரிசியோ நெல்லோ கையிருப்பில் இல்லை. அதனைத் தவிர்ப்பதற்கு போதிய நிதியும் இல்லாதுள்ளது' என்று குறிப்பிட்டு, தண்ணீர் வசதி காணப்படும் இடங்களில் ஏதாவது உணவு உற்பத்தி பயிர்ச்செய்கையைத் தாமதமின்றி ஆரம்பிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பு ஒரு நாட்டுக்கோ ஒரு பிராந்தியத்திற்கோ பாதிப்பாக இல்லை. அது முழு உலகுக்கும் அதன் மக்களுக்குமே தாக்கமாக அமைந்திருக்கின்றது. அதனையே நெல் உள்ளிட்ட தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள தாக்கங்களும் பாதிப்புகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அந்த வகையில் அமைச்சர் அமரவீரவின், இவ் வேண்டுகோள் காலத்திற்கு அவசியமானது. அது 'வருமுன் காப்போம்' நடவடிக்கைக்கு ஒப்பானதாகும். உணவு நெருக்கடி மோசமான கட்டத்தை அடைய முன்னர் அதனை ஊக்குவிப்பது அவசியமானது.

இலங்கையானது நெற்செய்கைக்கு ஏற்ற சீதோஷ்ண நிலையையும் மண்வளத்தையும் இயல்பாகவே பெற்றுக்கொண்டுள்ள நாடாகும். இந்த வளத்தை இந்நாட்டு மக்கள் ஆரம்ப காலம் முதலே உரிய முறையில் பயன்படுத்திக் கொள்கின்றனர். எனினும் தற்போது ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பு இலங்கைக்கு மாத்திரமுரிய பிரச்சினை அல்ல. அது உலகளாவிய நெருக்கடியாகும்.

இந்நாட்டிலும் உடவளவை நீர்த்தேக்கத்தின் கீழ் 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டிருந்த நெற்செய்கை அழிவடையும் நிலையில் இருப்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். அதனால் நெல் உள்ளிட்ட உணவுத் தானிய உற்பத்தியில் புவி வெப்பமாதல் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களையும் பாதிப்புக்களையும் கட்டுப்படுத்துவதற்கு எல்லா நாடுகளும் பங்களிக்க வேண்டும். இது தனியே ஒரு நாட்டினாலோ ஒரு தரப்பினராலோ தீர்வு காணப்படக்கூடிய பிரச்சினை அல்ல.

காலநிலை மாற்றத்தின் விளைவாகவே புவியின் வெப்பநிலை அதிகரித்து வருகின்றது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதனால் எதிர்காலத்தில் உணவு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் இப்போதே தண்ணீர் வசதி காணப்படும் இடங்களில் உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதே சாலச்சிறந்ததாகும்.

ஆகவே புவிவெப்பமாதலின் விளைவாக ஏற்பட்டுள்ள உணவு உற்பத்தி தொடர்பான அச்சுறுத்தல்கள் குறித்து உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதன் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய வகையில் தீர்மானங்களை எடுத்து செயற்பட வேண்டும். அப்போதுதான் உணவு நெருக்கடி மோசமடைவதன் தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழ்ப் பிரதேச கல்வித்துறையில் அபிவிருத்தி புரட்சியை ஏற்படுத்தியவர் இராதாகிருஷ்ணன்

## அகவை 71 இல் இன்று காலடி

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் இன்று (01.08.2023) தனது 71 ஆவது அகவையில் கால்பதிக்கின்றார்.

1952 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வேலுசாமி_ பாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராக பொகவந்தலாவை, இராணிக்காடு எனும் இடத்தில் பிறந்தார் இராதாகிருஷ்ணன். அவர் தனது ஆரம்பக் கல்வியை நுவரெலியா பரிசுத்த திருத்துவ மத்திய கல்லூரியிலும், உயர்தரம் வரையான கல்வியை கொழும்பு சென் பீட்டர்ஸ் கல்லூரியிலும் கற்றுள்ளார்.

அவர் தனது முதலாவது அரசியல் பயணத்தை 1988 ஆம் ஆண்டு அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஊடாக ஆரம்பித்தார். நுவரெலியா பிரதேச சபையின் நியமன உறுப்பினராக இ.தொ.காவினால்நியமிக்கப்பட்டார். 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்று நுவரெலியா பிரதேச சபையின் தலைவராக அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானால் நியமிக்கப்பட்டார். 1992 ஆம் ஆண்டு இலங்கையிலேயே சிறந்த பிரதேச சபையாக நுவரெலியா பிரதேச சபை தெரிவு செய்யப்பட்டது.அன்றைய ஜனாதிபதி பிரேமதாச அவர்களால் அதற்கான விருது வழங்கப்பட்டது.

1999 ஆம் அண்டு மாகாண சபைத் தேர்தலில் இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பின் மூலமாக போட்டியிட்டதுடன் அந்த குழுவிற்கு தலைமை தாங்கினார். அந்தத் தேர்தலில் அதிகபடியான வாக்குகளைப் பெற்று (33775 விருப்பு வாக்குகள்)வெற்றி பெற்றார். இந்த வெற்றியைத் தொடர்ந்து இவர் மத்திய மாகாண கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, சமூக சேவைகள், விளையாட்டு தோட்ட உட்கட்டமைப்பு, இந்து கலாசாரம் மற்றும் தமிழ் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.அதனைத் தொடர்ந்து அதே காலகட்டத்தில் தமிழ்,சிங்கள இரண்டு மொழிக்குமான அமைச்சராக நியமிக்கப்பட்டு 2002 ஆம் ஆண்டுவரை அதனை சிறப்பாக முன்னெடுத்துள்ளார்.

2004 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்றதுடன் தொடர்ந்தும் இரண்டாவது முறையாக மத்திய மாகாண கைத்தொழில், கிராமிய அபிவிருத்தி, சமூக சேவைகள், விளையாட்டு தோட்ட உட்கட்டமைப்பு,இந்து கலாசாரம் மற்றும் தமிழ் கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2009 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு தொடர்ந்தும் மூன்றாவது முறையாக மத்திய மாகாண அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இந்தக் காலப்பகுதியில் மலையகப் பாடசாலைகளில் புதிய கட்டடங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியடைந்தன.குறிப்பாக



அந்தக் காலகட்டத்தில் மலையகப் பகுதிகளில் அரசசார்பற்ற நிறுவனங்களான ஜி.டி.இசெட் மற்றும் சீடா நிவனங்களின் உதவியுடன் பல புதிய கட்டடங்களை அமைக்கப்பட்டன. மலையக கல்வியின் பொற்காலமாக அது குறிப்பிடப்பட்டது.

மலையகத்தின் மாற்றம் என்பது கல்வியினால் மாத்திரமே சாத்தியமாகும் என்ற ஒரே நோக்கத்துடன் அவர் செயற்பட்டார். அனைத்து வலயங்களுக்கும் ஒவ்வொரு பாடத்திற்குமான புதிய அதிகாரிகளை நியமித்ததுடன் அதிபர்கள் கட்டாயமாக பாடசாலை நேரத்தில் நேரத்தியாகவும் கழுத்துப்பட்டி அணிந்தும் வர வேண்டும் என்றும் நடைமுறைகளை உருவாக்கினார்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் இ.தொ.கா சார்பில் போட்டியிட்டு இரண்டாவது அதிகூடிய விருப்புவாக்குகளைப் பெற்று வெற்றி பெற்று நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.இ.தொ.காவுடன் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக அந்த கட்சியில் இருந்து வெளியேறி மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைத் தலைவராக பொறுப்பேற்றார். பின்பு ஒரு குறுகிய காலப் பகுதியில் அக்கட்சியின் தலைவராக பேராளர் மாநாடு மூலமாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

2014 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் தாவரவியல் பூங்காக்கள் பொதுப்பொழுதுபோக்கு பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார். பின்பு அமைச்சுப் பதவியை துறந்துவிட்டு 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சிப் பொதுவேட்பாளருக்கு தனது ஆதரவை வழங்கினார்.

புதிய அரசாங்கத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க கல்வி இராஜாங்க அமைச்சராக நியமனம் பெற்றார். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத்தேர்தலில் ஐ.தே.க பட்டியலில் போட்டியிட்டு மாவட்டத்தின் இரண்டாவது அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்றுக் கொண்டார்.(87375 விருப்பு வாக்குகள்)

புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் கல்வி இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இக்காலப்பகுதியில் நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் விஜயம் செய்து கல்விச் சேவையை முன்னெடுத்தார். குறிப்பாக வடக்கு, கிழக்கு உட்பட தமிழ் பேசும் மக்கள் எங்கெல்லாம் இருந்தார்களோ அங்கெல்லாம் சென்று தனது சேவையை முன்னெடுத்தார். மலையகத்தில் கிடப்பில் போடப்பட்டிருந்த 3192 ஆசிரியர் நியமனங்களை வழங்கினார். மலையக பாடசாலைகளில் கணித விஞ்ஞான பாடங்களை அபிவிருத்தி செய்வதற்காக 25 பாடசாலைகள் இணங்காணப்பட்டு அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு முழுமையாக பாடுபட்டார்.

வடக்கு, கிழக்கு மற்றும் முஸ்லிம்பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள பாடசாலைகளின் குறைபாடுகளை இனங்கண்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினார். இந்தக் காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 16 வள்ளுவர் சிலைகளை நாடுமுழுவதிலும் உள்ள பாடசாலைகள், பொதுஅமைப்புகளிடம் இலவசமாக வழங்கி வைத்ததுடன் அதனை நேரடியாக சென்று திறந்து வைத்தார். இதற்கான முழுமையான ஒத்துழைப்பை இந்தியாவின் வி.ஜி.பி குழுமத்தின் தலைவர் சந்தோசம் வழங்கினார்.

தமிழ்நாட்டில் அன்றைய கல்வி அமைச்சராகச் செயற்பட்ட செங்கோட்டையனின் அனுசரணையில் ஒரு இலட்சம் புத்தகங்களைப் பெற்று, அவற்றை யாழ் பழ்கலைக்கழகம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் வழங்கினார்.அமைச்சர் செங்கோட்டையனை வரவழைத்து அந்த புத்தகங்களை கையளித்ததுடன் அவருடைய பங்குபற்றுதலுடன் மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழாவை கண்டியில் சிறப்பாக முன்னெடுத்தார்.

பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ் மொழித்தின போட்டிகளை கண்டி, யாழ்ப்பாணம், மாத்தளை பகுதிகளில் சிறப்பாக முன்னெடுத்தார். மாணவர்களின் திறமைகளுக்கு களம் அமைத்துக் கொடுத்தார்.

2018 வருடம் ஒக்டோபர் மாதம் நடைபெற்ற ஆடசிமாற்றம் காரணமாக புதிய அமைச்சரவை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உருவாக்கப்பட்டது.இந்த அமைச்சரவையில் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சராக வேலுசாமி இராதாகிருஷ்ணன் நியமிக்கப்பட்டார். பின்பு 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு நுவரெலியா மாவட்டத்தின் இரண்டாவது அதிகப்படியான வாக்குகளை பெற்று இன்று எதிர்க்கட்சி உறுப்பினராக பாராளுமன்றத்தில் உள்ளார்.

சீத்தாஎலிய சீதைம்மன் ஆலயத்தினதும் நுவரெலியா ஆவெலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தினதும் அறங்காவலர் சபைத் தலைவராக தொடர்ந்து 30 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு வருகின்றார். இவருடைய தலைமையில் சர்வதேச இந்து மாநாடு நுவரெலியாவில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. இவருடைய கல்விச் சேவையை பாராட்டி இங்கிலாந்து பல்கலைக்கழகமொன்ற கௌரவ டொக்டர் பட்டம் வழங்கி இவரை கௌரவித்துள்ளது.

# வாழைச்சேனை பிரதேசத்தின் மூத்த பல்துறைக் கலைஞர் ஹெட்டி ஆராச்சி மெத்தியேஸ்

## 77ஆவது பிறந்த தினம்

வாழைச்சேனை பிரதேசமானது அக்காலம் முதல் கலைத்துறையில் பிரசித்தி பெற்று விளங்கி வருகின்றது. பாரம்பரியக் கலைகளான நாட்டுக்கூத்து, அதனைத் தொடர்ந்து மேடை நாடகம் போன்ற கலைகளில் ஆற்றல்மிக்க பல ஆளுமைகளை கொண்டு விளங்குகின்ற வாழைச்சேனையில் வாழ்கின்ற இலக்கிய ஆளுமைகளில் ஒருவர் கலாபூஷணம் ஹெட்டி ஆராச்சி மெத்தியேஸ் ஆவார்.

1946.08.01 இல் மட்டக்களப்பு கிரானில் ஹெட்டியாராச்சி – அன்னநேசம் தம்பதியரின் இரண்டாவது மகனாக அவர் பிறந்தார். சிறுவயது முதலே ஓவியம் வரைவதில் திறமையுடன் விளங்கினார். இவரது மூத்த சகோதரர் உறுதுணையாக விளங்கினார். 8 ஆம் வகுப்பில் படிக்கும்போது ஆசிரியர் சிவலிங்கம் அவர்களிடம் ஓவிய நுணுக்கங்களைக் கற்றார். பிரபல ஓவியர் 'சௌ' அவர்களின் தந்தை சௌந்தரராஜனும் இவருக்கு ஊக்கமளித்தார். மாஸ்டர் சிவலிங்கம் அவர்களின் சகோதரர் துரைசிங்கத்திடம் பயின்றபோது, அவரது தூண்டுதலினால், 'மருதம்' எனும் கையெழுத்துப் பத்திரிகையினை வெளியிட்டார். அதில் சிறுகதை, கவிதை போன்றவற்றை எழுதியதோடு தன்னுடைய ஓவியத்திறனையும் வெளிப்படுத்தினார். சக மாணவர்களையும் எழுதச் செய்தார்.

பாடசாலைக் காலத்திலேயே மேடை நாடகத்துறையிலும் இவருக்கு ஈடுபாடு அதிகமானது, 'மார்பிலா வெடி' எனும் நாடகம் இவருக்குப் பெருமை தேடித் தந்தது. எம்.ஏ.ரகுமான் நடத்திய இலக்கிய இதழான 'இளம்பிறை' இதழில் 'நிலவே' எனும் இவரது முதல் கவிதை பிரசுரமானது. அப்போது அவருக்கு வயது இருபது.

கிரான் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த எழுத்தாளர் ஆறுமுகம் (நவம்) அவர்கள் கல்கி இதழில் எழுதி பரிசுபெற்ற 'நந்தாவதி' சிறுகதையினைப் படித்த பின்னர், இவருக்கும் கதை எழுதவேண்டும் என்ற ஆர்வம் உண்டானது. தினபதி, சிந்தாமணி, தினகரன், வீரகேசரி மற்றும் இலக்கிய இதழ்களான கீதா, அருணன், இளம்பிறை போன்றவற்றிலும் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ளன.

1975 இல் பேரானந்தவல்லி என்பவரை திருமணம் செய்தார். இவர்களுக்கு நான்கு பெண் பிள்ளைகள் உள்ளனர். கல்கி இதழின் தீவிர வாசகரான இவர், தனது நான்கு பெண் பிள்ளைகளுக்கும் பாபுஜி, நேருஜி, ராஜாஜி, நேதாஜி எனச் செல்லப்பெயர் வைத்து அழைத்து வருகின்றார். இவரது துணைவியார் இவருக்கு மிகவும் உறுதுணையாக விளங்கி வருகின்றார்.




வாழைச்சேனை காகிதஆலையில் வர்ணம் தீட்டுவோனாக பணிபுரிந்த காலகட்டத்தில் 1975இல் 'வண்ணம்' எனும் கையெழுத்துப் பிரதியினை அதன் ஆசிரியராக இருந்து வெளியிட்டார். 1983 – 1990 வரை வாழைச்சேனை வெலிங்டன் தியேட்டரில் அறிவிப்பாளராக, ஓவியராக, முகாமையாளராகவும் பணிபுரிந்துள்ளார்.

ஆலயங்களுக்கு திரைச்சீலை, கடைகளுக்கான பெயர்ப் பலகைகள், போஸ்டர்கள் வரைதல் மூலம் வருமானமும் ஈட்டியுள்ளார். உள்நாட்டு இனவன்செயல்கள் நிறைந்த காலகட்டத்தில் அதே ஓவியத்திறமையினால் அசௌகரியங்களையும் எதிர்கொண்டுள்ளார்.

1980களில் இருந்து வாழைச்சேனை புதுக்குடியிருப்பு கலைவாணி கலாமன்றத்தின் தலைவர், செயலாளர் பதவிகளை பலமுறை வகித்ததுடன் அக்காலத்தில் பல நாடகங்களை எழுதி, இயக்கி, தயாரித்து, நடித்து மேடையேற்றியுள்ளார். மேடை நாடகத்துறையில் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தி பிரபலமான நாடகக் கலைஞராக விளங்கியுள்ளார். இவரது ஓவிய, நாடக, இலக்கியத் திறமைகளைப் பாராட்டி இலங்கை அரசின் 'கலாபூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

எஸ்.ஏ.ஸ்ரீதர்
நூலக சேவகர்
வாழைச்சேனை

# விவசாய உணவுத்துறையை மேம்படுத்த FAO ஸ்ரீலங்கா ஆரம்பித்துள்ள நடவடிக்கை

## பிரதிநிதி விம்லேந்திர ஷரன் பேட்டி

*இலங்கை அதன் மக்கள் தொகைக்கான உணவு உற்பத்தி, அணுகல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை பாதிக்கும் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கிறது. காலநிலை மாற்றம், விநியோகச் சங்கிலி சிக்கல்கள், பொருளாதார ஏற்ற இறக்கங்கள் மற்றும் கொவிட்19 தொற்றுநோய் போன்ற காரணிகள் இந்த சவால்களை மேலும் மோசமாக்கின.*

*இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) பிரதிநிதியான விம்லேந்திர ஷரன், publication உடன் நடத்திய உரையாடலில், இலங்கையின் தற்போதைய உணவுப் பாதுகாப்பின் நிலை குறித்த தனது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.*

***கேள்வி: கடந்த சில மாதங்களாக இலங்கையின் பயிர் மற்றும் உணவுப் பாதுகாப்பு நிலை தொடர்பான முரண்பாடான கூற்றுக்களை நாம் அவதானிக்கிறோம். நாட்டின் நிலைமை குறித்த FAO இன் மதிப்பீடு என்ன?***

***பதில்:*** *அனைத்து மாகாணங்களிலும் உணவுப் பாதுகாப்பு மேம்பட்டுள்ளது, சனத்தொகையில் சுமார் 17வீதம் அல்லது 3.9 மில்லியன் மக்கள் மிதமான கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர். இது முந்திய ஆண்டை விட 40வீதம் குறைவாகும். இருப்பினும், அதே காலகட்டத்தில் வறுமையின் அளவு இரு மடங்காக அதிகரித்துள்ள நிலையில், உணவுக்கான அணுகல் மிகவும் தீவிரமான பிரச்சினையாக உள்ளது. இலங்கையின் விவசாய உணவு முறைமையைக் கட்டியெழுப்புவதற்கான உடனடித் தேவை உள்ளது.*

***கே: விவசாய மற்றும் பொருளாதார நெருக்கடியின்போது இலங்கைக்கு ஆதரவு வழங்கியதில் FAO இன் பங்களிப்பு பற்றி குறிப்பிட முடியுமா?***



***பதில்:*** *எமது பங்காளிகளின் தாராளமான ஆதரவுடன், இலங்கையின் விவசாயம் மற்றும் மீன்பிடித் துறைகள் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களுக்கு உதவ FAO ஒரு விரிவான அணுகுமுறையை நடைமுறைப்படுத்தியது. சிறு விவசாயிகளுக்கும், சிறிய அளவில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கும் வாழ்வாதாரத்திற்கான உடனடித் தேவையான பண உதவி மற்றும் உரம் போன்ற அத்தியாவசிய உள்ளீடுகள் வழங்கப்பட்டன. போசாக்குள்ள பொருட்களுக்கான நிலையான அணுகலை அதிகரிக்க நகர்ப்புற தோட்டச்செய்கைக்கு ஆதரவளிப்பதனூடாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவினோம். துடிப்பான மற்றும் நிலையான விவசாயத் துறையை நோக்கி ஒரு பயனுள்ள நிலை மாற்றத் திட்டத்தை வடிவமைப்பதில் அரசாங்கத்துடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.*

***கே: உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த FAO வேறு என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது?***

***ப:*** *இலங்கையின் விவசாய உணவு முறையின் நீண்ட கால நிலைபேற்றுத் தன்மைக்கு மீள்தன்மை மற்றும் வளர்ச்சியை உருவாக்குவது மிகவும் முக்கியமானது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் உட்பட குறிப்பிடத்தக்க சவால்களை காலநிலை மாற்றம் தோற்றுவித்துள்ளது. இந்த பாதிப்புகளைத் தணிக்க, காலநிலைதிறன் விவசாய நடைமுறைகளில் முதலீடுகள் அவசியம். சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து, இலங்கையின் மூன்று ஆற்றுப் படுகைகளில் சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் முறைமை ஆரோக்கியத்தை வலுப்படுத்த, நிலையான, மீளுருவாக்கம் மற்றும் தாங்குதிறன் கொண்ட அரிசி அடிப்படையிலான உணவு முறைமையில் பணியாற்றுவதற்காக 5.33 மில்லியன் டொலர் நிதியுதவியுடன் கூடிய திட்டத்தை நாங்கள் வகுத்துள்ளோம்.*

*இவையே எமது சிறப்பம்சங்களாகும். இன்னும் பல திட்டங்கள் உள்ளன, மேலதிக விபரங்களுக்கு எங்கள் இணையத்தளத்தைப் பார்வையிடுமாறும் சமூக ஊடகங்களில் எங்களைப் பின்தொடருமாறும் உங்கள் பத்திரிகையின் வாசகர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.*





# கிழக்கின் குரல்



# நாட்டின் மருந்து தட்டுப்பாட்டை அரசாங்கம் நிவர்த்தி செய்துள்ளது

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன்



**வெல்லாவெளி தினகரன் நிருபர்**

இந்தியாவின் உதவியுடன் மருந்து தட்டுப்பாட்டை அரசாங்கம் நிவர்த்தி செய்துள்ளது என, விவசாய இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையில் ஆரம்ப சுகாதார சேவையினை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம், வைத்தியர் விடுதிக்கான மீள் புனரமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு, துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழுத் தலைவர் பிள்ளையான் தம்பி இலட்சுமணன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். இந் நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி.ஜே.ஜே.முரளிதரனும்,மாகாண சுகாதார பணிப்பாளர் டொக்டர் டீ.ஜீ.எம்.கொஸ்தா, கிழக்கு மாகாண திட்டமிடல் பணிப்பாளர் இரா.நெடுஞ்செழியன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டி வைத்தனர்.

இங்கு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், துறைநீலாவணை தொடக்கம் வெருகல் வரையான வைத்தியசாலைகளில் பல்வேறு வகையான குறைபாடுகள் காணப்பட்டாலும், எம்மக்களின் தேவைகளை அறிந்து மக்கள் இன்னல்களை தீர்ப்பதுதான் எனது பணியாக இருக்கின்றது.

துறைநீலாவணை வைத்தியசாலையில் வைத்தியர் விடுதி பிரச்சினை, சுற்றுமதில் பிரச்சினை உள்ளிட்ட பல பிரச்சனைகள் இருக்கின்றன. இதனை கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் போன்றோரிடமும், அரசாங்கத்திடமும் கேட்டு நிறைவேற்றிக் கொடுக்க வேண்டிய தார்மீக கடமையை எனக்கு வாக்களித்த மக்களுக்கும், கிராமங்களுக்கும் நிறைவேற்றிக்கொடுப்பேன் என்றார். துறைநீலாவணை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் காவுவண்டி, ஆளணிப்பற்றாக்குறை, உள்ளிட்ட பிரச்சினைகளை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் நிறைவேற்றித்தருவார் எனும் நம்பிக்கை இருக்கின்றது எனத் தெரிவித்தார்.

# பொலிஸார், சிவில் பாதுகாப்பு குழுக்களுடன் கலந்துரையாடல்

**அட்டாளைச்சேனை தினகரன், ஒலுவில் விசேட நிருபர்கள்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களில், செயற்பட்டு வரும் சிவில் பாதுகாப்புக் குழு பிரதிநிதிகளுடனான விஷேட கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை (30) அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி டபிள்யூ. எஸ்.ஏ.சதாத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பொலிஸ் உயரதிகாரிகள், சர்வமத தலைவர்கள், சிவில் பாதுகாப்பு குழு பிரதிநிதிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையினை இல்லாதொழிப்பது தொடர்பில், குற்றச் செயல்களை கட்டுப் படுத்துவதற்கான விஷேட நடைமுறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

வீதி விபத்துக்கள், டெங்கு நோய் தாக்கம் போன்றவற்றால் நாளாந்தம் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவற்கு மக்கள் அனைவரும் முன்வர வேண்டியதன் அவசியம் குறித்து, அனைத்து இனத்தவர்கள் மத்தியிலும் பரஸ்பர ஒற்றுமையினை வளர்க்கும் செயற்றிட்டங்களை அமுல்படுத்துவற்கான வேலைத் திட்டங்கள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அம்பலத்தாறு ஷெய்கு சிக்கந்தர் வொலியுல்லாஹ்வின் 131ஆவது கந்தூரி

**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**





அக்கரைப்பற்று அம்பலத்தாறு அஷ் ஷேய்க் குதுபுனா ஷெய்கு சிக்கந்தர் வொலியுல்லாஹ் அவர்களின் 131ஆவது கொடியேற்றம் மற்றும் கத்தமுல் குர்ஆன் ஓதும் நிகழ்வுகளை தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை (30) வேலாமரத்து வெளி மஸ்ஜிதுன் நூராணி பள்ளிவாசலில் ஒழுங்குசெய்யப்பட்ட கந்தூரி வைபவம் பெருந்திரளான மக்கள் மத்தியில் நடைபெற்றது.

பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எல் எம் அபுல் காசிம் தலைமையில், பக்கீர் பாவாக்களின் ரபான் முழக்க ஊர்வலத்தை தொடர்ந்து, கொடியேற்றத்துடன் நிகழ்வுகள் சென்ற வாரம் ஆரம்பமாகின. கந்தூரி வைபவத்தில் விசேட அதிதியாக கலந்து கொண்ட கட்டார் நாட்டு ஹம்மாட்டின் கலீபா பல்கலைக்கழக பேராசிரியர் எம்.எம்.தீன் மொஹம்மத் விசேட சொற்பொழிவையும், துஆப் பிரார்த்தனையையும் நிகழ்த்தினார். பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம கந்தூரி நிகழ்வை நார்சா (உணவுப் பார்சல்) வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

இக் கந்தூரி வைபவம் இம்முறை மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்யப் பட்டமையால் பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# பாடசாலைகளில் டெங்கு ஒழிப்பு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின், சுகாதார பாதுகாப்பு கருதி டெங்கு ஒழிப்புக்கான சிரமதானம் மற்றும் தூய்மைப் படுத்தும் பணிகள் என்பன அவ்வப் பிரதேச பொது அமைப்புக்களினதும், பழைய மாணவர்களின் பங்களிப்புடன் பாடசாலை நிருவாகத்தினர் மற்றும் சுகாதார குழுவினரின் ஆலோசனைக்கமைய இடம்பெற்று வருகின்றன.

மேலும் பருவ கால மழை ஆரம்பமாவதற்கு முன், பாடசாலையின் உள்வெளி வளாகம், நீர் தேங்கும் இடங்கள், பூந்தோட்டம், விளையாட்டு முற்றம் மற்றும் நீர்த்தாங்கிகள் உள்ளிட்டவைகளை தூய்மைப்படுத்தி சேகரிக்கப்படும் கழிவுகளையும் உரிய தரப்பினர்கள் அகற்றி வருகின்றனர்.

# தகவல் அறியும் சட்டத்தால் மூவின மக்களும் நன்மை

## மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர்

**பெரியபோரதீவு தினகரன், அட்டாளைச்சேனை குறூப் நிருபர்கள்**

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தால் மூவின மக்களும் மிகுந்த நன்மை அடைந்துள்ளதால், அதனை இன்னமும் காத்திரமாக எடுத்துச் சென்று மக்களை விழிப்படைய வைக்க வேண்டுமென, காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளரும், மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தெரிவித்தார்.

மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும், அவற்றுக்கு சாத்தியமான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் சம்பந்தமான விழிப்புணர்வூட்டல் செயலமர்வு, அட்டாளைச் சேனையிலுள்ள மனித எழுச்சி அமைப்பு அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (30) இடம்பெற்றது.

இதில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காணி உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்கள், காணிகளை இழந்தவர்கள் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் 400 இற்கு மேற்பட்டோர் கோரிய தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் வெற்றி அளித்து பொதுமக்கள் தகவல்களைப் பெற்றுள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

# பண்டிச் சம்பா ஆதிக்கத்தால் விளைச்சல் குறையும் அபாயம்

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர் விவசாய விரிவாக்கல் பிரிவு மற்றும் சம்மாந்துறை விவசாய விரிவாக்கல் பிரிவிற்குட்பட்ட பயிர் செய்யப்பட்டு தற்போது அறுவடைக்கு தயாராகவுள்ள வயல் நிலங்களில் "கிலுகிலுப்பான்", பண்டிச் சம்பா இனம் மிகையாக வளர்ச்சியடைந்து பிரதான பயிர்களுக்கு சூரிய ஒளி செல்லுவதை தவிர்த்து, அதற்குரிய பசளைகளையும் உறிஞ்சி கதிர் பறிவதை குறைத்தும் வருகின்றது. இதனால் விவசாயிகளின் இப்போக விளைச்சல் குறையலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட விவசாய உயர் அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி இந்த பண்டிச் சம்பா நெல் இனத்தை அடியோடு இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச விவசாயிகள் கேட்டுள்ளனர்.

## நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்;

# பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வு

**அட்டாளைச்சேனை விசேட நிருபர்**



நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப் தலைமையில் வெள்ளிக்கிழமை (28) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம், நிந்தவூர் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புத் தரப்பினர், பள்ளிவாசல் தலைவர்கள். சமூக அமைப்புக்களின் பிரதானிகள் மற்றும் அரச அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இவ் வருடத்தில் நிந்தவூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள கல்வி,சுகாதாரம்,வீதி அபிவிருத்தி, விவசாயம்,நீர்ப்பாசனம், கடலரிப்பு, கட்டுமான வேலைத்திட்டங்கள்,செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் அதற்கான அனுமதியும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவினால் வழங்கப்பட்டது.

வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளின் அசமந்த போக்கினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும், நெற் காணிகளை யானைகள் துவம்சம் செய்து வருவதாக இங்கு பலரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் முசாரப், வன ஜீவராசிகள் அதிகாரிகளின் அசமந்தப் போக்கை தாம் வன்மையாக கண்டிப்பதாகவும், விவசாய உற்பத்தியை யானைகளின் அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக அவர்களது சொந்த செலவில் விவசாயிகள் மேற்கொண்டு வரும் யானை வேலி அமைக்கும் செயற்பாடுகளுக்கு வன ஜீவராசிகள் அதிகாரிகள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்க வேண்டுமென உத்தரவிட்டார்.

# "விழுமியம்" சஞ்சிகை வெளியீட்டு வைப்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் அக்கரைப்பற்று கிளையின் ஏற்பாட்டில், "விழுமியம்" சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை (29), அஷ்ஷேக்.ஏ.ஜீ.ஏ.றவூப் (இஸ்லாஹி) தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் வை.றாசீத் , அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபீக், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் பிராந்திய பொறுப்பாளர்கள், கல்வியியலாளர்கள், உலமாக்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இச் சஞ்சிகை தொடர்பில் விசேட உரையாற்ற வளவாளர்களாக கலந்து கொண்ட கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேக் எம்.ரீ. ரிஸ்வி மஜீதி, வாசிப்பு எனும் தலைப்பிலும், தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் அப்துல் றசாக் விழுமியம் சஞ்சிகை ஓர் குறுக்கு வெட்டு பார்வை எனும் தலைப்பிலும் உரையாற்றியதோடு, சஞ்சிகையின் பிரதிகளும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளுக்கு ஏற்பாட்டுக் குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டது.

# ஜாமியத்துல் பலாஹ் முன்னாள் அதிபரின் 7ஆவது ஞாபகார்த்த நிகழ்வு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஷைகுல் பலாஹ் மர்ஹூம் அப்துல்லாஹ் ரஹ்மானியின் 7ஆவது வருட ஞாபகார்த்த நிகழ்வு (29) சனிக்கிழமை காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் மற்றும் ஜாமியத்துல் பலாஹ் அரபுக் கல்லூரி நிருவாக சபை ஆகியவற்றின் ஏற்பாட்டில் பழைய மாணவர் சங்க தலைவர் மௌலவி அப்துல் அஸீஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், புனித அல்குர்ஆன் ஓதப்பட்டு துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

இதன் போது முன்னாள் அதிபர் ஷைகுல் பலாஹ் மர்ஹூம் அப்துல்லாஹ் ரஹ்மானி ஹஸரத் அவர்களைப் பற்றிய நினைவுரையை அஷ்ஷெய்ஹ் ஜலீல் மதனி அவர்களும், கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் மர்ஹூம் ஆதம் லெவ்வை ஹஸ்ரத் அவர்கள் பற்றிய நினைவுரையை கல்லூரியின் இயக்குனர் சபை செயலாளர் மௌலவி எம்.எச். எம் புகாரி பலாஹி ஆகியோர் நிகழ்த்தினர்.

# கறுப்பு ஜூலை தின நிகழ்வு



**மணல்சேனை நிருபர்**

துறைநீலாவணை தமிழரசுக் கட்சியின் வட்டாரக் கிளையின் ஏற்பாட்டில், கறுப்பு ஜூலை தின நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (30) வட்டாரக் கிளையின் தலைவர் த.கணேசமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஜூலைக் கலவரத்தில் உயிர் நீத்தவர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, நிகழ்வுகள் ஆரம்பமான. இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், அம்பாரை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கி.ஜெயசிறில், தமிழசுக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் கி.சேயோன் உட்பட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# சுயதொழில் வழிகாட்டல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

பாலமுனை பிரதேசத்தில் முதற்கட்டமாக வறிய குடும்பங்களை இனங்கண்டு, அவர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கில் சுயதொழிலை ஆரம்பித்து அதனை விற்பனை செய்வது தொடர்பிலான வழிகாட்டல்கள் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம்.சீத் தலைமையில் சனிக்கிழமை (29) நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதேசத்தின் முக்கியஸ்தர்கள், கல்விமான்கள், சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்,விளையாட்டுக் கழகங்கள் என பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.



வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் தமிழ் பேசும் மக்களுக்குரிய நிரந்தர அரசியல் தீர்வான சமஷ்டியை வலியுறுத்தி திங்கட்கிழமை (31) திருகோணமலை நகரசபையை அண்மித்த பகுதியில் அமைதியான முறையில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம் பெற்ற போது. *(படம்: அன்புவழிபுரம் தினகரன், ரொட்டவெவ குறூப் நிருபர்கள்)*

# அனைத்துலகத் தமிழியல் நான்காவது ஆய்வுமாநாடு குறித்த ஊடக அறிக்கை

'சமூகக்கட்டுமானத்தில் சங்கமருவிய காலஅற இலக்கியங்கள்' எனும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் நடத்துகின்ற நான்காவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வுமாநாடு எதிர்வரும் 07ஆம் 08ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. 07.08.2023 திங்கட்கிழமை காலை 09.00 மணியளவில் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் கி.விசாகரூபனின் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது. தொடக்கநாள் நிகழ்வுக்கான வாழ்த்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா ,மாநாட்டின் இணைத்தலைவரும் கலைப்பீடப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் வழங்கவுள்ளனர். நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஆற்றவுள்ளார்.

மேலும் ஆரம்பநாள் நிகழ்வுகளில் கௌரவிப்பு நிகழ்வு முக்கிய இடம் வகிக்கின்றது. அந்தவகையில் தமிழுக்குப் பணியாற்றிய மூத்த பேராசிரியர்கள், பண்டிதர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளதுடன், வடக்கு மாகாணப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இடையே நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். மூத்த பேராசிரியர்களுக்கான கௌரவத்தினை வாழ்நாட் பேராசிரியர் சி.தில்லைநாதன், வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பெற்றுக் கொள்ளவுள்ளனர். அன்றையதினம் பிற்பகல் 02.00 மணியளவில் ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரை அளிக்கைகள் ஆரம்பமாகும். பேராசிரியர் க.கைலாசபதி அரங்கு, பேராசிரியர் சு. வித்தியானந்தன அரங்கு,பேராசிரியர் கா. சிவத்தம்பி அரங்கு, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை அரங்கு என நான்கு அரங்குகளில் 48 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 08.08.2023 செவ்வாய்க்கிழமை பி.ப 02.00 மணிக்கு கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகவுள்ளன. முதல் நிகழ்வாக,பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஜெ.தவேதனின் பேச்சு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஈழத்துப் பாரம்பரிய அரங்கு: பல்வகைமையும் பயில் முறையும் என்ற தொனிப் பொருளில் மூத்த நாட்டுக் கூத்துக் கலைஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை விரிவுரையாளருமான திரு. வை. விஜயபாஸ்கரின் நெறியாள்கையில் அளிக்கை செய்யப்படவுள்ளது.

# வடக்கின் உதயம்

## சட்டவிரோதமாக கடலாமைகளை கொண்டு சென்ற இருவர் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சட்டவிரோதமான முறையில் நான்கு கடலாமைகளை பட்டா ரக வாகனத்தில் கொண்டு சென்ற இருவரை மானிப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர். மானிப்பாய் நகரப்பகுதியில் வீதிப்போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமையவே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் நிலையபதில் பொறுப்பதிகாரி மில்றோய் தலைமையிலான போக்குவரத்துப் பொலிஸார் இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டனர். பட்டா ரக வாகனமொன்றை வழிமறித்து சந்தேகத்திற்கிடமான முறையில் வாகனத்தின் பின்புறமாக சாக்கினால் கட்டப்பட்டிருந்த மூட்டைகளை சோதனையிட்ட போது 4 கடலாமைகளை உயிருடன் கைப்பற்றியிருந்தனர்.

கொழும்புத்துறை மற்றும் இளவாலை பகுதிகளைச் சேர்ந்த 47,32 வயதுகளையுடையவர்கள் என தெரியவருகின்றது. சந்தேகநபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட கடலாமைகள் இளவாலை, கீரிமலை கடற்பரப்புக்களில் பிடிக்கப்பட்டு குருநகர் பகுதிக்கு விற்பனைக்காக கொண்டு சென்றதாக முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

## ஹெரோயின் போதையுடன் கைதான நால்வருக்கு விளக்கமறியல் உத்தரவு

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் மானிப்பாய் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைதான இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நால்வரிடமும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நால்வரையும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மல்லாகம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

அதனையடுத்து நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.




யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர் உற்சவம் நேற்றைய தினம் மிக சிறப்பாக நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காணலாம். (படம் கரவெட்டி தினகரன் நிருபர்)

## மடு ஆலய திருவிழா; உணவகங்களில் தர சோதனை

**தலைமன்னார் விஷேட நிருபர்**

மடுஆலய விழாவுக்காக அமைக்கப்பட்ட கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் சுகாதார பரிசோதனைக்குட்படுத்தப்படும் என மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

எதிர்வரும் ஆவணி மாதம் 15 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மருதமடு அன்னையின் வருடாந்த பெருவிழா சுகாதார நடைமுறைகளை பின்பற்றிய வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

மருதமடு ஆலய வளாகத்துக்குள் இருக்கும் வைத்தியசாலையில் எமது சுகாதாரப் பிரிவினர் தங்கியிருந்து அவசர, சாதாரண சிகிச்சைகள் அளிப்பதற்கான எற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவசர நோளாளிகளை இங்கிருந்து வேறு வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்துடன் மடு ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் டெங்கு நோயை பரப்பக்கூடிய நுளம்புகள் உள்ளனவா என பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு டெங்கு நுளம்பு இனம் காணப்பட்டால் புகையூட்டல் இடம்பெறும். அத்தோடு அப்பகுதிகளில் கடைகள் மற்றும் விற்பனை நிலையங்கள் அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் சகலரும் சுகாதார பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் என அவர் தெரிவித்தார்.

## வவுனியாவைச் சேர்ந்த 4 பேர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சம்

**மன்னார் குறூப் நிருபர்**

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக புகலிடம் தேடி வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த நால்வர் அகதிகளாக தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல் முனை கடற்கரையை நேற்று காலை சென்றடைந்துள்ளனர்.

தகவலறிந்த மரைன் பொலிஸார் அவர்களை மீட்டு மண்டபம் மரைன் காவல் நிலையத்துக்கு அழைத்து சென்றுள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் இரு பிள்ளைகள் என தெரியவந்துள்ளது.

கடந்தகாலங்களில் இலங்கையிலிருந்து அகதிகளாக தமிழகம் சென்றவர்களின் எண்ணிக்கை 269 ஆக அதிகரித்துள்ளது.



## வட, கிழக்கில் சமஷ்டி முறை அதிகார பகிர்வை வலியுறுத்தி மக்கள் விழிப்புணர்வு போராட்டம்

**மன்னார் குறூப் நிருபர்**

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வட, கிழக்கு மாகாணத்துக்குள் மீளப்பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி நேற்று (31) காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் விழிப்புணர்வு நிகழ்வொன்று நடைபெற்றது.

இதன் போது கலந்து கொண்டவர்கள் பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் வடமாகாண இணைப்பாளர் ஜாட்சன் பிகிராடோ,

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வட கிழக்கு மாகாணத்திற்குள் மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி கடந்த ஒரு வருட நிறைவை நினைவு கூறுகின்றோம்.




கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்த போராட்டத்துக்கு நாளை முதலாம் ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியடைகின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வட, கிழக்கு மாகாணத்திற்குள் மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி 100 நாள் செயலமர்வை நடத்தி இருந்தோம்.

அதன் விளைவாக மக்கள்,பல்வேறு குழுக்கள்,சிவில் சமூகம் உள்ளிட்ட பலருடன் கலந்துரையாடி நாங்கள் ஒரு அறிக்கையை சமர்ப்பிக்கின்றோம். பல்வேறு நாடுகளுக்கும் அறிக்கையை சமர்பிக்கின்றோம்.

மக்களின் குரலாக தொடர்ந்து ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வட, கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஸ்டி முறையிலான அதிகார பகிர்வை வலியுறுத்தி வடகிழக்கு மக்களாகிய நாங்கள் தொடர்ந்தும் குரல் கொடுத்துக்கொண்டு இருப்போம் என அவர் தெரிவித்தார்.

## வயல்களுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயம்

**யாழ்.விசேட நிருபர்**

அராலியில் கடல் நீர் உட்புகாத வகையில் வயல் வெளிகளை அண்டிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மண்மேடுகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை பொதுமக்கள் நேற்றுமுன்தினம் மடக்கிபிடித்துள்ளனர்.

அராலி கடற்கரையை அண்மித்த பகுதிகளிலுள்ள வயல் வெளிகளுக்குள் கடல் நீர் உட்புகாத வகையில் மண்மேடுகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இவற்றிலுள்ள மணல்மேடுகளிலிருந்து மணல் அகழ்ந்து டிப்பர்களில் ஏற்றிக் கொண்டு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

## ஐயப்பன் திரைப்படத்தில் நடிக்க வாய்ப்பு



இலங்கையில் முதன் முதலாக தயாரிக்கப்படவுள்ள தமிழ் பக்தித் திரைப்படமான ஐயப்பன் திரைப்படத்தில் நடிப்பதற்கு நடிகர்கள் சிலர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இலங்கையில் முதன் முதலாக தயாரிக்கப்படவுள்ள ஐயப்பன் திரைப்படத்தில் நடிப்பதற்கு மேலும் பல நடிக நடிகைகளும் தேவைப்படுவதால் இதில் நடிப்பதற்கு ஆர்வமுள்ளவர்கள் 2023.08.05ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு புறக்கோட்டை பழைய நகர சபை மண்டபத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. இதில் மணிகண்டனாக நடிப்பதற்கு 10 வயதுக்கு உட்பட்ட பாலகன் ஒருவனும் மற்றும் பிள்ளைகளும் பெண்களும் ஆண்களும் தேவைப்படுகிறார்கள். அந்தப்படத்தில் நடிக்க தெரிவு செய்யப்பட்ட நடிகர்களும் இதில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

## நல்லூரில் ஆன்மீக நூல் வெளியீட்டு விழா

**கரவெட்டி தினகரன் நிருபர்**

யாழ்ப்பாணம் நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த சைவப்புலவர் அ.இராஜரட்ணத்தால் எழுதப்பட்ட "சைவ சமய வாழ்வியலும் ஆன்மீகமும்" எனும் நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை(30) காலை 9.30 மணியளவில் நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப்பிள்ளையார் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

முன்னாள் இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பணிப்பாளரும், கல்விஅமைச்சின் மேலதிக செயலாளரும்,முன்னாள் அரசாங்க அதிபருமாகிய உடுவை. எஸ்.தில்லை நடராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய குரு ராதாகிருஷ்ணன் குருக்கள்,

நல்லை ஸ்ரீல ஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள் ஆசியுரையை வழங்கினர்.



கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜாவும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும்,சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனும், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவரும், முன்னாள் மாநாகர ஆணையாளருமாகிய சீ.வீ. கே.சிவஞானமும் கலந்து சிறப்பித்தனர்.




# சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்காக நன்பேரியல் வீதியை திறந்துவிட நடவடிக்கை

*காவத்தை தினகரன் விசேட நிருபர்*

பலாங்கொடை நன்பேரியல் நெங்ரெக் வீதியில் சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பதற்கு உள்ள தடையை நீக்குவதற்கு சம்பந்தப்பட்ட தோட்ட கம்பனி உட்பட சகல தரப்பினர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் அண்மையில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின் இணைத் தலைவர்களான சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மற்றும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல ஆகியோர் தலைமையில் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.



அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த சில வருடங்களுக்கு முன்பு சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் அரச நிதி ஒதுக்கீட்டின் கீழ் நன்பேரியல் நெங்ரெக் வீதியின் 15.5 கிலோ மீற்றர் தூரம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்டது.

இவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட வீதியை நன்பேரியல், தேயிலை தொழிற்சாலைக்கு அருகில் உள்நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டு தோட்ட நிர்வாகத்தினால் கதவுகள் மூடப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

மிகவும் பசுமையான சுற்றுலா பிரதேசமான நன்பேரியல் நெங்ரெக் பிரதேசத்துக்குள் உள்நுழைவது குறித்தும் தோட்ட நிர்வாகம் பணம் வசூலிப்பது குறித்தும் தோட்ட நிர்வாகத்துடன் பல்வேறு முரண்பாடுகள் இடம்பெறுவதாகவும் இதனால் சுற்றுலா பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகவும் பொதுமக்கள் சுட்டிகாட்டினர்.


எனவே வீதி பிரச்சினை குறித்து சம்பந்தப்பட்டவர்களிடம் பேச்சுவாரத்தை நடாத்தி அதை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர, இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான காமினி வலேபொட, வருன லியனகே, சப்ரகமுவ மாகாண பதில் பிரதான செயலாளர் பிரபாத் உதாகர, இரத்தினபுரி மாவட்ட செயலாளர் வசந்த குனரட்ன மற்றும் அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் உட்பட முக்கிய அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



புதிய ஜனநாயக மாக்சிய லெனினிச கட்சியின் 45ஆவது ஆண்டு விழாவும், பகிரங்க பொதுக் கூட்டமும் மாத்தளை நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (30) காலை நடைபெற்றது. இந்த நாட்டின் இடதுசாரி இயக்க வரலாற்றில் சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சி அதிகாரத்தின் அடக்குமுறைக்கும், ஏகாதிபத்திய அதிகார அடக்குமுறைக்கும் மத்தியில் தேசிய இனங்களின் விடுதலைக்கு உழைக்கும் கட்சியாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி திகழ்கின்றது. ஆ.ரமேஸ்

# மஸ்கெலியா சென். ஜோசப் தேசிய கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்



*மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்*

மஸ்கெலியா சென்.ஜோசப் தேசிய கல்லூரியின் புதிய அதிபராக திரு. பரமேஸ்வரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதே கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வி முதல் உயர் தரம் வரை கல்வி பயின்றார். கல்லூரி பழைய மாணவரான இவர் , ஆசிரியராக , உப அதிபராக சேவையாற்றியுள்ளார். கடந்த சில ஆண்டுகளாக ஹற்றன் கல்வி திணைக்களத்துக்குட்பட்ட புளும்பீல்ட் தேசிய பாடசாலையில் அதிபராக சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும்

## வடிவேல் சுரேஷ் எம்.பி கோரிக்கை

*ஊவா சுழற்சி நிருபர்*



நாட்டில் 13 ஆவது அரசியல் சீர்திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும் என பதுளை பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் நாயகமுமான வடிவேல் சுரேஷ். தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை கட்சிகள் மட்டுமின்றி இந்தியாவில் கூட இலங்கையில் 13ஆவது அரசியல் சீர்திருத்தம் அமுல்படுத்தப்பட வேண்டும் என தொடர்ந்து அழுத்தம் விடுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டில் பதவியேற்ற அனைத்து ஜனாதிபதிகளும் இதுதொடர்பில் வாக்குறுதியளித்து மக்களை ஏமாற்றியுள்ளனர். விசேடமாக வடகிழக்கு மக்களும் மலையக மக்களும் கூட முற்று முழுதாக ஏமாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த காலத்திலேயே மஹிந்த ராஜபக்ச புதிய மாற்றங்களுடன் 13+ நடைமுறைப்படுத்தப் போவதாக சர்வதேசத்துக்கு வாக்குறுதி அளித்திருந்தார். இதனை யாராலும் மறக்க முடியாது. ஆனாலும் அது வாய் வார்த்தையாகவே அமைந்திருந்தது.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13 ஐ நடைமுறைபடுத்துவதற்கு ஆதரவு தாருங்கள் என சர்வகட்சி மாநாட்டை நடத்துவது வரவேற்கத்தக்க விடயம் என அவர் தெரிவித்தார்.



புதிய அலை கலை வட்டத்தின் கலை, இலக்கிய பிரிவு ஏற்பாடுசெய்த 'சமகாலத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் நேர்மறையான சிந்தனைகள் மற்றும் இலக்குவைக்கப்படுதல்" தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வொன்று கடந்த சனியன்று (29.07) கொழும்பு 13, எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலையில் நடைபெற்றது. பாடசாலையின் அதிபர் ஸ்ரீவைகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகர் ராதாமேத்தா, தலைவர் சண்மு ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின் வளவாளராக தனா பங்கேற்றிருந்தார். நிகழ்விற்கான ஏற்பாடுகளை புதிய அலை கலை வட்ட கலை, இலக்கியப் பிரிவின் தலைவர் சனாதனன் மேற்கொண்டிருந்தார்.

# பெரிய இராணிவத்தை தோட்டத்தில் தீவிபத்து

## தொழிலாளர் தேசிய சங்கத்தினால் உதவி

*நோட்டன் பிரிட்ஜ் நிருபர்*

பெரிய இராணிவத்தை தோட்டத்தில் அண்மையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொழிலாளர் தேசிய சங்கத்தினால் நிவாரணபொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



லிந்துலை பெரிய இராணிவத்தை தோட்டத்தில் அண்மையில் தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் நேரில் சென்று சந்தித்ததோடு அவர்களுக்கான நிவாரண பொருட்களையும் வழங்கி வைத்தார். பெரிய இராணிவத்தை தோட்டக் குடியிருப்பொன்றில் ஏற்பட்ட தீ விபத்தினால் 16 குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன. அக்குடும்பங்களைச் சேர்ந்த 76 பேர் தற்போது தற்காலிக இருப்பிடமொன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — ஞாயிற்றுக்கிழமை 2023.07.30 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5191 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 27,816,040.00 — ஆங்கில எழுத்து N — வெற்றி இலக்கங்கள் 4 2 7 8 4 9

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1539 — 30/07/2023 — Double Chance 77658 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 402,713,272.00 — ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 03 — வெற்றி இலக்கங்கள் 05 55 57 67 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 500 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 4,067,935.40 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 16 37 47 50 — விசேட இலக்கினம் மகரம்

Lucky 7 லக்கி — திகதி 30.07.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0017 — வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 7 7 7 7 0 0 — L7 இலக்கம் 1 1 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,288,742.16

தன நிதானய — திகதி 2023/07/30 — சீட்டிழுப்பு இலக்கம் 1221 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 102,544,901.60 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 09 12 13 42 — விசேட எழுத்து L — லக்ஷபதி Double Chance இலக்கம் 14726

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3433 — சீட்டிழுப்பு திகதி 2023.07.30 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 70,850,302.00 — ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 11 57 59 62 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 31235


# ஜப்பானிய வெளியுறவு அமைச்சரின் புதுடில்லி விஜயம் இரு நாடுகளின் கூட்டு நகர்வுக்கு உதவுமென நம்பிக்கை

கடந்த வியாழன் தனது தென்மேற்கு ஆசியா மற்றும் ஆபிரிக்க விஜயத்தின் பகுதியாக புதுடில்லி விஜயம் மேற்கொண்டிருந்த ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் யொஷிமாஸா ஹயாஷி, இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

ஜப்பானிய பிரதமர் ஃபூமியோ கிஷிடாவின் திறந்த மற்றும் சுதந்திரமான இந்தோ பசுபிக் பிராந்திய கொள்கை மற்றும் உலகளாவிய சட்ட ரீதியான ஆட்சிக்கு உறுதுணையாக இருத்தல் ஆகியவற்றை மீளுறுதி செய்யும் வகையில் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் ஓகஸ்ட் நான்காம் திகதிவரையில் இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா, மாலைதீவுகள், உகண்டா மற்றும் எத்தியோப்பியாவுக்கு இவ்விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார். இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஜப்பானிய அமைச்சரை சந்தித்த பின்னர் கருத்து வெளியிட்டபோது, இரு நாடுகளுக்கு இடையிலான விசேட மூலோபாய மற்றும் உலகளாவிய கூட்டு நகர்வுகளுக்கு இப் பேச்சுவார்த்தை வழி வகுத்திருப்பதாக தெரிவித்தார். இப்பேச்சுவார்த்தையின் பின்னர் புதுடில்லி இம்பீரியல் ஹோட்டலில் நடைபெற்ற இந்திய – ஜப்பான் சம்மேளனத்தில் ஜப்பானிய அமைச்சர் கலந்து கொண்டார். தெற்குலக நாடுகளின் கருத்துக்களைத் தெரிந்துகொள்ள இவ்விஜயம் உதவும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

ஜப்பானிய வெளியுறவு அமைச்சரின் இரண்டாவது இந்திய விஜயம் இதுவாகும். தன் மார்ச் மாத விஜயத்தின் போது குவாட் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

# பற்றாக்குறை நிலவும் நாடுகளுக்கு இந்தியா அரிசி ஏற்றுமதி செய்யும்

## தடைக்கு அப்பாலும் நடவடிக்கை

அரிசி ஏற்றுமதிக்கு இந்தியா தடை விதித்துள்ள போதிலும் புவியியல் அரசியல் காரணங்களினால் உணவு பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள மற்றும் உக்ரேன் தானிய ஏற்றுமதிக்கு ரஷ்யா விதித்துள்ள தடையால் உருவாகியுள்ள உலக தானிய பற்றாக்குறையால் பாதிப்படையக் கூடிய நாடுகளுக்கு இந்தியா தானியம் ஏற்றுமதி செய்யும் என புதுடில்லி அறிவித்துள்ளது.

உலக அரிசி ஏற்றுமதியில் 40 சதவீதமான ஏற்றுமதியை இந்தியாவே மேற்கொண்டு வருகிறது. உலகின் 140 நாடுகளுக்கு இந்தியா அரிசி ஏற்றுமதி செய்து வருவதன் மூலம் உலக உணவு பாதுகாப்புக்கு இந்தியா பங்களிப்பு இன்றியமையாததாக இருக்கும் நிலையிலேயே, அரிசி ஏற்றுமதிக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோதுமை மற்றும் அரிசி உற்பத்திக்கு பிரசித்தி பெற்ற பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, சில மாநிலங்களில் மழை பிந்தியமை போன்ற காரணங்களினால் அரிசி கையிருப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியாலேயே இந்தியா, பாஸ்மதி தவிர்ந்த ஏனைய அரிசி வகைகளின் ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்தது. உள்நாட்டில் தாராளமாக அரிசி கிடைக்கும் வகையிலும் அதன் விலை அதிகரிப்பை தடுக்கவும் வேறுவழியின்றி இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக உணவு அமைச்சு தெரிவித்திருந்தது.மழை வீழ்ச்சி வேறு சில மாகாணங்களில் தாமதமாகியிருப்பதால் நாற்று நடுதல் பிந்தியிருந்தாலும் வழமை போலவே அறுவடை நடைபெறும் என்றும் அடுத்த பருவத்தில் விளைச்சல் பாதிக்கப்படாது எனவும் இந்திய விவசாய சங்கங்கள் கூறியுள்ளன.

# 2024 வரவு – செலவு திட்டத்திற்கான முன்மொழிவு கோரல்

## நீர்கொழும்பு மாநகர சபை

2024ம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத்திற்கான ஆவணத்தில் உள்ளடக்குவதற்கும் அவற்றை எடுத்து நோக்குவதற்காக நீர்கொழும்பு நகராட்சி எல்லையினுள் நிறைவேற்ற வேண்டிய அபிவிருத்தி செயற்பாடுகள் பற்றிய முன்மொழிவுகளை முன்வைக்க குடிமக்களாகிய உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

- ➢ முன்மொழிவுகளுக்குரிய ஆதனங்கள் நீர்கொழும்பு நகராட்சி எல்லையினுள் காணப்படும் நகர சபைக்கு சொந்தமான ஆதனமாக இருக்க வேண்டும்.
- ➢ முன்மொழிவு ஒன்று அல்லது பலவற்றை முன்வைக்க முடியும்.
- ➢ முன்மொழிவுகள் பலவற்றை முன்வைக்கும் போது முன்னுரிமைக்கு ஏற்ப அவற்றை ஒழுங்குபடுத்தி கூறல் வேண்டும்.

உங்களது கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை 2023.08.31 திகதிக்கு முன்பதாக கீழ்வரும் முகவரிக்கு பதிவு தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**நகராட்சி ஆணையாளர்**
**மாநகர சபை,**
**நீர்கொழும்பு.**
**மின்னஞ்சல் : nmcaccbk@gmail.com**

# நகர்வலம்



# ஜப்பான், இலங்கை ஒத்துழைப்பு விடயங்களை துரிதப்படுத்துவதன் அவசியங்கள் ஆராய்வு

ஜப்பான் இலங்கை ஒத்துழைப்பின் முக்கிய விடயங்களை துரிதப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுக்கு ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இத்திட்டத்தில், இலகு ரயில் திட்டம், துறைமுக கிழக்கு முனையம், கண்டி அபிவிருத்தி, மத்திய அதிவேக நெடுஞ்சாலை மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய விரிவாக்கத் திட்டங்கள் என்பன உள்ளடங்குகின்றன.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்த ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் ஹயாஷி யோஷிமாசா அண்மையில் (29) கொழும்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால இருதரப்பு உறவுகளை நினைவு கூரும் வகையில் இக்கலந்துரையாடல் அமைந்திருந்தது.

பல்வேறு துறைகளில் இவ்வுறவுகளை மேலும் வலுப்படுத்த பரஸ்பர புரிந்துணர்வுடன் இரு தரப்பும் செயற்படுவதன் அவசியமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

இலங்கையில் கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டுக்கு ஜப்பான் அரசாங்கம் வழங்கும் ஆதரவுக்கு, இதன்போது நன்றி தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடன் மறுசீரமைப்பு தொடர்பான பொதுவான தளத்தை மேம்படுத்தும் மற்றும் செயல்முறையை விரைவுபடுத்தும் நோக்கில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனுடன் நடைபெற்ற கலந்துரையாடல் குறித்தும் விளக்கினார்.

இந்து சமுத்திர பிராந்தியத்தை அமைதியான மற்றும் நிலையான பிராந்தியமாக பேணுவதற்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் இச்சந்திப்பில் வலியுறுத்தப்பட்டது. பிராந்திய மற்றும் பல்வேறு உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் கலந்துரையாடினார்.

தொழில் சந்தை சார்ந்த பொருளாதாரத்தில் இருந்து உயர் தொழில்நுட்ப பொருளாதார மாற்றத்தை எதிர்பார்த்துள்ள இலங்கையின், உயர் தொழில்நுட்ப கைத்தொழில் முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சருக்கு தெளிவூட்டினார்.

இதற்காக ஜப்பானிய முதலீட்டாளர்களை ஊக்குவிக்கத் தேவையான பணிகளை மேற்கொள்வதாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

# அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றுகூடலில், புதிய நிர்வாகம் தெரிவு

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**



அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்களின் ஒன்று கூடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் (27) நடைபெற்றது.

இதன்போது அநுராதபுரம் மாவட்ட ஊடகவியலாளர்கள் சங்கத் தெரிவும் நடைபெற்றது.

தலைவலர் : அப்துல் ஹமீட் தம்சீர்

செயலாளர் : பேர்சி குறுநேறு

பொருளாளர் : பிரபாத் சஞ்ஜய ஜய சிங்க.

இணைப்பாளர்: ஏ. ஆர். மொஹமட் நிப்ராஸ்.

அமைப்பாளர் : டபிள்யு.எம்.தயாரத்ன எம்போகம.

உப தலைவர் :சந்ரதாச மலவஆராச்சி.

உப செயலாளர் : எல். அநுர குமார.

உறுப்பினர்களாக :

ஆர்.ஹேமந்த வர்ணசூரிய , கே.ஏ.வசந்த பண்டார கழுஆராச்சி, திஸர சமல் சோமரத்ன, எஸ்.எஸ். கே.லீலாரத்ன, ஏ.ஆர். எம்.றபியுதீன், ஏ.எச்.எம். இபாம், சீ.எம்.ஆரிபால மற்றும் எம்.ரீ.ஆரிப் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆலோசகர்களாக: ரஜரட்ட பல்கலைக்கழக உபவேந்தர் அநுராதபுரம் சுவர்ணபாலி வைத்தியாரமாதிபதி அதி வணக்கத்துக்குரிய ஈதல்வெட்டுனுவெவ ஞானதிலக, சிரேஷ்ட சட்டத்தரணி சீ.எஸ்.ஆர். பேமலால் மற்றும் ஊடகவியலாளர் உபுல் தம்பிட்ட ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நூல்கள் சேகரிப்புக்கு உதவவும்

பாடசாலைகள் தோறும் மாணவரிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில், றோயல் கல்லூரியின் எடெக்ஸ் அமைப்பும், றோயல் கல்லூரியின் வாசிகசாலை வாசகர் சங்கமும் இணைந்து புத்தக சேமிப்பு திட்டத்தை அறிமுகம் செய்துள்ளன.

இத் திட்டத்துக்கமைய, நாடு பூராகவும் நூல்களை திரட்டி பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளது. நூல்களை இலவசமாக வழங்க விரும்புவோர் றோயல் கல்லூரி வாசிகசாலை நூல்கள் சேகரிப்பின் பணிப்பாளர்களில் ஒருவரான துலஞ்சன விக்கிரமசிங்க அல்லது எடெக்ஸ் அமைப்பு தலைவர் கலகெதரவுடன் ஒப்படைக்குமாறு கோரப்படுகின்றனர். இந்நூல் சேகரிப்புத் திட்டத்துக்கு

றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றமும் அனுசரணை வழங்குகிறது. மேலதிக தகவல்களுக்கு 0115521497 0113091086 ஆகிய இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

# அநுராதபுரம் ஸாஹிர தேசிய பாடசாலையின் வருங்கால அபிவிருத்திகளை ஆராயும் கூட்டம்



**கெக்கிராவ குறூப் நிருபர்**



அநுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் அபிவிருத்திகள் தொடர்பான விஷேட கூட்டம் நேற்று (31) அதிபர் ஜஹாபர் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் கலந்துகொண்டார். 55 வருட வரலாற்றைக்கொண்ட அநுராதபுர மாவட்டத்தின் முதல் தமிழ் மொழி மூல தேசிய பாடசாலையான இப்பாடசாலையில் நிலவும் குறைகள் குறித்து இங்கு ஆராயப்பட்டது.

இதன் பின்னர்,இவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஆலோசனைகளும் பெறப்பட்டன.

பாடசாலையின் அபிவிருத்திக்கு பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் உறுதியளித்தார்.

இந்நிகழ்வில் வட மத்திய மாகாண கல்வி திணைக்களத்தின் பிரதி செயலாளர் ரழியுதீன், தொழிலதிபர் தாரிக், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் அல் பாரிஸ், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்



வெள்ளவத்தை GIT பாலர் பாடசாலையின் மாணவர் கண்காட்சி அதிபர் திருமதி ரூபி விநாயகமூர்த்தி தலைமையில் இருதினங்கள் (29,30) இடம்பெற்றன. இக்கண்காட்சியில் பாலர் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் பங்கேற்றனர். ஜனனம் அறக்கட்டளை தலைவர். கல்வியாளர் கலாநிதி.ஜனகனும் இக்கண்காட்சியை பார்வையிட்டார்.

# கலீபத்துல் குலாபா மொஹமட் ஸுஹுர் ஆலிமுக்கு கௌரவம்



**ருஸைக் பாரூக்**

சவூதி அரேபியாவின் மக்காவிலுள்ள பைத்துல் பாஸியால் இலங்கையில் புதிதாக நியமிக்கப்பட்ட கலீபத்துல் குலாபா மொஹமட் ஸுஹுர் ஆலிமுக்கு கௌரவம் வழங்கப்பட்டது. அத்தியாதுஸ் ஷாஸுலியத்துள் பாஸியா ஏற்பாட்டில், கொழும்பு பேங்க்ஷால் வீதியில் அமைந்துள்ள அஸ்ஸாவியாத்துஸ் பாஸியாவில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அஜ்வாதுல் பாஸியா அரபிக் கல்லூரி அதிபரும் உம்மு சாவியா கதீபுமுமாகிய கலீபத்துல் ஷாஸுலி அஹமட் ஸூபி மஹ்லரி தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதில், அத்தியாயத்துஷ் ஷாதுலியதுல் பாஸியாவின் தலைவர் அல்ஹாஜ் எம். ஜைனுல் ஆப்தீன், உபதலைவர் தாசிம் ஹாஜி, செயலாளர் எம்.எச்.எம். முஸாதிக், கொழும்பு முன்னாள் பிரதி மேயர் அல் ஹாஜ். எம்.டி.எம். இக்பால் ஆகியோர் கலீபத்துல் குலாபா முஹம்மது ஸுஹுர் ஆலிம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி நினைவு சின்னம் வழங்கினர். செயலாளர் கலீபத்துஷ் ஷாஸுலி மௌலவி ஏ.எச்.எம். அஜ்வார்ட் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



நூலாசிரியர் நா. நகுலேஸ்வரனின் " முனை உடைந்த முறை" எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு பழைய நகர சபை கேட்போர் கூடத்தில் (29) சனிக்கிழமை மாலை நடைபெற்றபோது, நூலின் முதல் பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நூலாசிரியர் இடமிருந்து பெறுவதையும் அருகில் விமர்சன உரை ஆற்றிய கவிஞர் மேமன் கவி, கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் ஜோசப் பர்னாந்து உட்பட நூலாசிரியரும் உடன் காணப்படுகின்றனர்.

# கெக்கிராவ பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

**கெக்கிராவ குறூப் நிருபர்**

கெக்கிராவ பகுதியில் விவசாய பொருட்களை விற்பனை செய்யும் பிரபல கடையில் 25 இலட்சம் ரூபா பணமும் முப்பது இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும் திருடப்பட்டுள்ளன. கடந்த புதன் கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. வங்கியில் வைப்பிலிடுவதற்காக வைத்திருந்த பணத்தொகையே இவ்வாறு திருடப்பட்டதாக கடை உரிமையாளர் தெரிவித்தார்.

கடை உரிமையாளர் தொழில் நிமித்தம் மியன்மார் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில், முகமூடி அணிந்த திருடனே,இத்திருட்டில் ஈடுபட்டுள்ளார். கடையின் சீ,சீ,ரீ,வீ, யை பரிசோதனை செய்த கெக்கிராவ பொலிஸார் கடையில் பணி புரிபவர்களிடம் வாக்குமூலங்களை பெற்றுள்ளனர். திருடனை பிடிப்பதற்கான தீவிர முயற்சியில் இறங்கியிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக கெக்கிராவ மற்றும் மரதங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், திருட்டுக்கள் அதிகரித்து வருவதால் மக்கள் அச்சத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் மரதங்கடவல பகுதியில், விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் கடையில் ஒரு கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதுவரை,திருடன் கைது செய்யப்படவில்லை.



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தென்றல் எப்.எம், அறிவிப்பாளர் முஹம்மட் இர்பான் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஒலிபரப்பாகும் பொன்மாலைப்பொழுது நிகழ்ச்சி நேற்று முன்தினம் (30) கூட்டுத்தாபன ஆனந்த சமரகோன் கலையகத்தில் நடைபெற்றது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இதில், பிரதம அதிதியாக கலந்து கொண்டார். திறமைகளை வெளிப்படுத்தியோருக்கு பாராட்டுக்கள் மற்றும் பரிசில்கள் என்பன அதிதிகளால் வழங்கப்பட்டது. இர்பானின் பொன்மாலைப்பொழுது நிகழ்ச்சி 15 ஆவது வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளது. இந்நிகழ்ச்சியில் முஹம்மட் இர்பான், சந்துரு ராஜ சூரியர், பாரா, டிலானி, அஷான், ரேணு ஆகியோர் மிகத்திறமையாக பாடல்களை இசைத்தனர்.

# பௌதிக வளங்கள் பற்றாக்குறையிலும் வெற்றிப் பயணத்தில் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி

MTFE நிறுவனத்தினால் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு பேண்ட் வாத்திய இசைக்கருவிகளுடன் அதற்கான சீருடைகளும் வழங்கி வைக்கும் நிகழ்வு அதிபர் எம். ஏ. ஹைருன் நிஸா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இப்பாடசாலை பெற்றோரும் எம். டி. எப். ஈ நிறுவனத்தின் நிறைவேற்று இயக்குனருமான எஸ். எம். சியாம்டீன் கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

இதில் M T F E நிறுவனத்தின் பதுளை நகர் மத்திய நிலையத்தின் பிரதான நிர்வாக அலுவலக உத்தியோகஸ்தர் குசலா ரட்ன, உபாலி ரனவன்க வெலிமடை மத்திய நிலையத்தின் பிரதான அலுவலக உத்தியோகஸ்தர் பிரசாத், பெற்றோர், எம். டி. எப். ஈ. பதுளை அலுவலகத்தின் உத்தியோகஸ்தர்கள், ஆசிரியைகள் மற்றும் மாணவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். அத்தோடு வளமான பொருளாதாரத்தை தொழில் நுட்ப பொறிமுறை ஊடாக பொருளீட்டல் தொடர்பான பாடசாலை ஆசிரியைகளுக்கான விழிப்புணர்வூட்டல் கருத்தரங்கும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



**MTFE நிறுவனத்தின் இயக்குனர் எஸ். எம். சியாம்டீனால் பௌதிக வளப்பற்றாக் குறையை நிவர்த்திக்க முதல் முயற்சியாக பேண்ட் வாத்திய இசைக்கருவிகள் வழங்கல்.....**





### பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் எம். ஏ. ஹைருன் நிஸா தலைமையுரையாற்றும் போது

பேண்ட் வாத்தியக் கருவிகள் பாடசாலை மாணவிகளின் நலன் கருதி நாங்கள் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த விடயம். நாங்கள் அவர்களிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கு இணங்க இக் குறையை நிவர்த்தி செய்ய முன்வந்தமையையிட்டு MTFE நிறுவனத்தின் பிரதான இயக்குனர் எஸ். எம். சியாம்டீனுக்கு நான் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அதிபர் எம். ஏ. ஹைருன் நிஸா தெரிவித்தார்.

சாதாரணமாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 10 ஆண்டுகள் ஆகின்றன. தற்போது இப்பாடசாலை விஞ்ஞான, கணித வகுப்புக்களை கொண்ட க. பொ. த உயர் தரப் பாடசாலையாக விளங்குகின்றன. சுமார் 500 க்கும் மேற்பட்ட மாணவிகள் கற்கின்றனர். அரசாங்கத்தின் உதவியும் பல வளங்களுடன் இப்பாடசாலையினை ஆரம்பித்தோம். ஆனாலும் எங்களுடைய வேகமான முன்னேற்றத்தின் காரணமாக சகல வளங்களையும் அரசாங்கத்திடம் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இப்பாடசாலையின் பிரதான மூன்று மாடி வகுப்பறைக் கட்டடத்தைத் தவிர அனைத்துக் கட்டடங்களும் தற்காலிமான தகரத்திலான வகுப்பறைக் கொட்டில்களாகவே உள்ளன. மாணவர்களுக்கான கற்றலுக்கான வகுப்பறைச் சூழல் அவசியம். அந்தச் சூழலை இங்கு கல்வி பயிலும் மாணவிகள் இழந்த நிலையில் உள்ளனர். அதிக வெயில் காலங்களில் மாணவிகளோ அல்லது ஆசிரியைகளோ தாக்குப் பிடிக்க முடியாமல் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். அதேநேரம் மழைக்காலங்களில் தகரக் கொட்டிலின் சப்தம் அதிகம் இருப்பதால் படிப்பிக்க இயலாத நிலைமை காணப்படுகின்றது.

இரு வகையிலான கால நிலை மாற்றங்களின் போது மாணவிகளும் ஆசிரியர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றார்கள். ஆனால் பாடசாலையின் பெறுபேறுகளின் அடிப்படையில் எந்தளவு முன்னுக்குச் செல்ல முடியுமோ அந்தளவுக்கு பாடசாலை மட்டத்தில் முன்னணியில் திகழுகின்றோம்.

**மழைக்காலங்களில் தகரக் கொட்டில்களில் சப்தம் அதிகரிப்பதால் கற்பிக்க இயலாத நிலைமை.....**



தற்போது எமது பாடசாலை வளாகத்திற்குள் ஏழு கட்டடங்கள் உள்ளன. இதில் இரண்டைத் தவிர ஏனைய கட்டடங்கள் அனைத்தும் தற்காலிமாக அமைக்கப்பட்ட கட்டடங்கள் ஆகும். ஆகவே நாங்கள் இவற்றை வைத்துக் கொண்டு தான் பெரிய வெற்றியைக் கண்டு கொண்டிருக்கின்றோம். இத்தகைய குறைபாட்டை நிவர்த்தித்தால் இந்தப் பாடசாலையின் பெறுபேற்றை மென் மேலும் உயர்த்திச் செல்ல முடியும் என்பதை நான் அதிபர் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கின்றேன். உதாரணமாக விஞ்ஞானம், கணிதம் பிரிவுகள் ஆரம்பித்திருக்கின்றோம். ஆனால் ஆய்வு கூட வசதிகள் இல்லை. அதே போன்று பாடசாலையின் முக்கியமான பகுதிதான் மதில் சுவர். அதுவும் எங்களுக்கு இல்லாத நிலை உள்ளன. அது தொடர்பாக அரசாங்கத்திடமும் மக்கள் பிரதிநிதிகளுக்கும், கல்வி அமைச்சுக்கும் கோரிக்கை விடுத்துள்ளோம். அதே போன்று தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையோருக்கும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

குறிப்பாக இலங்கையில் பல சமூக நிறுவனங்கள் உள்ளன. ஒரு மகளிர் பாடசாலை என்ற விடயத்தைக் கவனத்திற் கொண்டு இப்பாடசாலையின் பௌதிக வளங்களை பெற்றுக் கொள்வதற்கு ஏதாவது நிறுவனங்கள் உதவி செய்ய முன்வந்தால் இப்பாடசாலையை மேலும் சிறந்த முறையில் கட்டி எழுப்ப முடியும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இப்பிரச்சினைகளை அறிந்து இப்பாடசாலையின் பௌதீக வளப்பற்றாக் குறையைப் பெற்றுத் தந்துதவுமாறு இந்தச் சந்தர்ப்பத்தில் கோரிக்கையாக விடுக்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



### MTFE நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று இயக்குனர் எஸ். எம். சியாம்டீன்

பாடசாலையின் வேண்டு கோளுக்கு இணங்க பேண்ட் வாத்திய இசைக் கருவிகளுடன் அதற்கான சீருடைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று என்னுடன் கலந்துரையாடல்களை நடத்தினர். அந்த வகையில் எனது சமூகப் பணிகளில் முதன்மையானதாக என் பிள்ளைகள் இருவர் இப்பாடசாலையில் கற்கின்றார்கள் என்ற அடிப்படையில் இப் பாடசாலையை தெரிவு செய்தோம். M T F E நிறுவனத்தின் மூலம் கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் பாரிய சமூகப் பங்களிப்புச் செய்துள்ளேன்.

இந்த நிறுவனம் கனடா நாட்டினை தலைமையகமாகக் கொண்டு இயங்குகின்ற ஒரு நிறுவனம் ஆகும். பதுளைப் பிரதேசத்திலுள்ள பெரு எண்ணிக்கையிலான மக்கள் பங்குச் சந்தையில் முதலீடு செய்து செயற்கையான முறையில் ரொபோ தொழில் நுட்பத்தின் மூலம் வெற்றிகரமான வருமானத்தை ஈட்டிகின்றார்கள் என்பது நாம் அறிந்த விடயம். இந்த நிறுவனம் சமூகப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது. ஊவா மாகாணத்தில் முதல் தடவையாக இந்த நிறுவனத்தை ஆரம்பித்து பணியாற்றி வருகின்றோம். இலங்கையில் 62 கிளைகள் இந்நிறுவனத்திற்கு உள்ளன. இந்த நிறுவனத்தின் மூலம் இப்பிரதேச மக்கள் அதிகளவு வருமானத்தை ஈட்டிவருகின்றார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லலாம். அவர்கள் எந்தளவுக்கு வருமானத்தைப் ஈட்டலாம் என்று சொல்லமுடியாதளவுக்கு வருமானம் ஈட்டி வருகின்றனர்.

இந்த நிறுவனத்தின் ஊடாக அதிகளவிலான நிதியை இப்பாடசாலைக்கு ஒதுக்கி பேண்ட் வாத்தியக் கருவியுடன் அதற்கான சீருடைகளைப் பெற்றுக் கொடுக்க முடிந்தமையையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

ஊவா மாகாணத்தில் இரு ஆரம்ப பாடசாலைகளை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றோம். அல் ஹிக்மா ஆரம்ப பாடசாலையும், சரஸ்வதி தமிழ் ஆரம்ப பாடசாலையாகும். அல் ஹிக்மா பாடசாலைக்கு உரித்தான இடம் 20 வருடம் வேளாண்மை செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்ட வயல் காணியாகும். அதை நிரப்புவதற்கான அனுமதி கிடைக்கும் பட்சத்தில் இதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை வெகு விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம். இந்த இரு பாடசாலைகளுக்கும் 14 கோடி ரூபா செலவில் கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பாடசாலைக்கு பேண்ட் வாத்தியக் கருவிகளை அன்பளிப்புச் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கித் தந்த அதிபருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேவேளையில் இந்த வாய்ப்பை வழங்கிய M T F E சமூக நிறுவத்திற்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.



### மலையக முஸ்லிம் கவுன்சிலின் முன்னாள் ஸ்தாபகத் தலைவர் ஏ. எம். எம். முஸம்மில்.....

பதுளை முஸ்லிம் மகளிர் கல்லூரி உருவாக்கம் என்பது பதுளை மாவட்ட முஸ்லிம் மாணவிகளது காலத்தின் தேவையைக் கருதி பெரும் போராட்டத்திற்கு மத்தியில் பெற்றுக் கொள்ளப்பட்ட பாடசாலையாகும். குறிப்பாக ஒரு கலாசார பிரச்சினையின் மூலம் ஏற்பட்ட ஒரு கருத்து முரண்பாட்டின் காரணமாக அதற்கு வேறு வழியின்றி புதிய பாடசாலை ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இது முஸ்லிம் சமூகத்திற்கு கிடைத்த பாரிய வெற்றி எனக் கொள்ளலாம். பதுளை வாழ் முஸ்லிம்களது அந்த கருத்தொற்றுமையின் காரணமாக பெற்றுக் கொள்ளப்பட்ட பாடசாலை இது. கடந்த பத்து வருடங்களுக்கு முன் 2007 ஆம் ஆண்டு ஐந்தாம் மாதம் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

அன்று முதல் இன்று வரையும் நாளுக்கு நாள் பல சாதனைகளை முன்னெடுத்து வருகின்றன. குறிப்பாக க. பொ. த உயர் தர வகுப்புக்களை ஆரம்பித்து பல தசாப்தங்கள் கடந்தும் பல்கலைக்கழக புகுதலைப் பெற்றுக் கொள்ளாத பாடசாலைகளுக்கிடையே இப்பாடசாலை ஒவ்வொரு க. பொ. த உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றுகின்ற மாணவிகள் பல்கலைக்கழகம் செல்வதற்கான வாய்ப்பினை பெற்று வருகின்றனர். 2018 ஆம் ஆண்டியிலே க. பொ. த உயர் தரப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தொடர்ந்து நான்கு வருடங்களாக க. பொ. த உயர் தரப் பரீட்சையில் மாகாண மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்கின்ற பாடசாலையாக பதுளை பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி காணப்படுகின்றது.

இப்பாடசாலை இன ஒருமைப்பாட்டுக்கான ஒரு முன்மாதிரியான பாடசாலையாகக் காணப்படுகின்றது. குறிப்பாக இப்பாடசாலையில் தமிழ் மொழி மூலப் பிரிவில் முஸ்லிம், இந்து, கிறிஸ்தவ மாணவிகள் கல்வி பயிலுகின்றனர். இப்பாடசாலையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆசிரியர்கள் ஒற்றுமையுடன் தத்தமது கலாசாரங்களைப் பேணி மாணவிகளின் கல்வி எழுச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றுகிறார்கள். இப்பாடசாலையில் இனவேற்றுமை என்ற சொல்லுக்கு இடமில்லை. யாவருக்கும் தகுதிக்கு ஏற்ப திறமைகளை வெளிக்காட்ட வாய்ப்பளிக்கின்ற ஒரு பாடசாலை.

கடந்த நான்கு வருடங்களாக ஊவா மாகாண மட்டத்தில் பெறுபேறுகளின் அடிப்படையில் ஊவா மாகாணத்தில் 918 பாடசாலைகள் உள்ளன. அதில் முதல் நிலைப் பாடசாலையாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த அடைவு மட்டத்தை கௌரவிக்கும் வகையில் ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் அவர்களினால் அதிபர் அவர்களைப் பாராட்டி கௌரவித்துள்ளமை தொடர்பில் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இப்பாடசாலை எதிர்காலத்தில் மும்மொழியிலும் இயங்க வேண்டும் என்பது எங்களுடைய எதிர்பார்ப்பாகும். குறிப்பாக சிங்கள மொழி மூலத்திலும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு சிங்கள மாணவிகளும் இப்பாடசாலைக்கு வருகை தந்து படிக்க வேண்டும் என்பது எங்களுடைய அவாவாகும். மூவின மக்களுடைய பிள்ளைளும் ஒரே கூரையின் கீழ் கற்கின்ற பாடசாலையாகத் திகழ வேண்டும் என்பதே இந்தப் பாடசாலையின் பெற்றோர் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலையில் கல்வி பயிலும் சகல மாணவிகளின் பெற்றோர்களும் இந்த கருத்தில்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இப்பாடசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பாடசாலையின் சுதந்திரமான பயணத்திற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். வலயக் கல்விப் பணிமனை, மாகாண கல்விப் பணிமனை, கல்வி அமைச்சு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.











இக்பால் அலி

## எல்.பி.எல். முதல் போட்டியில் நடப்புச் சம்பியனுக்கு வெற்றி



லங்கா பிரீமியர் லீக் (எல்.பி.எல்.) தொடரின் முதல் போட்டியில் கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் அணியை 21 ஓட்டங்களால் நடப்புச் சம்பியன் ஜப்னா கிங்ஸ் அணி வீழ்த்தியது.

நான்காவது லங்கா பிரீமியர் லீக் தொடர் கடந்த ஞாயிறன்று (30) கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட ஜப்னா கிங்ஸ் அணி 20 ஓவர்களுக்கும் 5 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களை பெற்றது.

தொடர்ந்து பதிலெடுத்தாடிய கொழும்பு ஸ்ட்ரைக்கஸ் 19.4 ஓவர்களில் 152 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது. தனது நான்கு ஓவர்களுக்கும் 17 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்திய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த அட்ட நாயகன் விருதை வென்றார்.

## மேற்கிந்திய இளையோர்கள் இலங்கைக்கு சுற்றுப்பயணம்



இரண்டு இளையோர் டெஸ்ட் மற்றும் மூன்று இளையோர் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக மேற்கிந்திய தீவுகள் 19 வயதுக்கு உட்பட்ட அணி இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இதில் ஒருநாள் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் 27 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 1 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு தொடர்ந்து செப்டெம்பர் 5 தொடக்கம் 15 ஆம் திகதி வரை டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர்களுக்கான மைதானங்கள் இன்னும் தீர்மானிக்கப்படாதபோதும் பெரும்பாலும் தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் போட்டிகள் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### வலைப்பந்து உலகக் கிண்ணம்

## கடைசி இடங்களுக்காக இலங்கை அணி போட்டி



தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் வலைப்பந்தாட்ட உலகக் கிண்ண போட்டியின் ஆரம்ப சுற்றின் மூன்று குழு நிலை போட்டிகளிலும் தோல்வியை சந்தித்த இலங்கை சம்பியன் கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பை இழந்துள்ளது.

எனினும் இலங்கை அணி தொடரில் 13 தொடக்கம் 16ஆவது இடங்களை தீர்மானிப்பதற்காக ஈ குழுவில் போட்டியிடவுள்ளது.

எனினும் இலங்கை அணி கடந்த ஞாயிறன்று நடைபெற்ற போட்டியில் உலகத் தரவரிசையில் 9 ஆவது இடத்தில் இருக்கும் வேல்ஸ் அணிக்கு கடைசி வரை கடும் போட்டி கொடுத்த நிலையிலேயே தோல்வியை சந்தித்தது. இதன்போது 56–68 என்ற புள்ளிகளாலேயே இலங்கை தோல்வி அடைந்தது.

எனினும் இலங்கை தனது முதல் இரு போட்டிகளிலும் ஜமைக்கா மற்றும் போட்டியை நடத்தும் தென்னாபிரிக்காவிடம் மோசமான தோல்வியை சந்தித்து சி குழுவில் கடைசி இடத்தையே பெற்றது.

# 27 ஆண்டுகளின் பின்னர் கால்பந்து தொடரின் இறுதியில் மாளிகாவத்தை



சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு மாளிகாவத்தை யூத் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது. ஜாவாலேன் மற்றும் மாளிகாவத்தை யூத் இடையில் நேற்று முன்தினம் (30) சிட்டி லீக் மைதானத்தில் நடைபெற்ற தீர்க்கமான இறுதிச் சுற்றுப் போட்டியில் 1–0 என்ற கோல் வித்தியாசத்தில் மாளிகாவத்தை யூத் அணி அதிரடி வெற்றியை பெற்றது. அதன்படி கொழும்பு கால்பந்து கழகம் மற்றும் மாளிகாவத்தை யூத் இடையிலான, இறுதிப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 6 ஆம் திகதி பிற்பகல் 3.30க்கு சிட்டி லீக் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மாளிகாவத்தை யூ அணி இவ்வாறான தொடர் ஒன்றில் இறுதிப் போட்டிக்கு கடைசியாக தகுதி பெற்றது 27 ஆண்டுகளுக்கு பின்னர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற விஜய குமாரணதுங்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் மாளிகாவத்தை யூத் கழகம் தகுதி பெற்றிருந்தது.

16 அணிகள் பங்கேற்ற விஜய குமாரணதுங்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் மாளிகாவத்தை யூத்–சோன்டர்ஸ் அணிகள் சுகததாச விளையாட்டு அரங்கில் மோதியதோடு அதில் 1–0 என சோன்டர்ஸ் அணி வெற்றியீட்டியது.

தொடர்ந்து மாளிகாவத்தை யூத் விளையாட்டுக் கழகம் பல்வேறு காரணங்களால் பின்னடைவை சந்தித்ததோடு, தற்போது இராணுவப் படை அணியின் முன்னாள் தலைவர் மொஹமட் இசதீனின் பயிற்சியின் கீழ் அந்த அணி சோபிக்க ஆரம்பித்துள்ளது.

ஜாவாலேன் மற்றும் மாளிகாவத்தை யூத் இடையிலான போட்டியில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் பெறாததோடு, 74 ஆவது நிமிடத்தில் மொஹமட் சப்ரான் வெற்றி கோலை பெற்றார். ஜாவாலேன் அணியின் பின்கள வீரர்கள் மூவரில் பந்தை முன்னோக்கி எடுத்துவந்த சர்பான் அந்த வெற்றி கோலை புகுத்தினார். இலங்கை கால்பந்து விளையாட்டுக்கு சர்வதேச தடை இருக்கும் வேளையில் ஜாவாலேன் மற்றும் மாளிகாவத்தை யூத் இடையிலான போட்டியை பார்ப்பதற்கு 2300 அளவான ரசிகர்கள் வருகை தந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

6ஆவது முறையாகவும் நடைபெறும் சிட்டி லீக் தலைவர் கிண்ண கால்பந்து தொடரில் வெற்றி பெறும் அணிக்கு 150,000 ரூபாவும் இரண்டாம் இடம் பிடிக்கும் அணிக்கு 100,000 ரூபாவும் பரிசாக வழங்கப்படுவதோடு ஒவ்வொரு போட்டியிலும் திறமையை காட்டுகின்ற வீரர்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. சிட்டி லீக் கால்பந்து லீக்கின் தலைவர் ஆர். புவனேந்திரனின் தனிப்பட்ட நிதியில் அனுசரணை வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியா மத்தி அணிக்கு சமபோஷா வெற்றி கிண்ணம்



**கிண்ணியா மத்திய, தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**

அகில இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட 14 வயதுக்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான சமபோஷா கால்பந்தாட்ட போட்டியில் கிண்ணியா மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

கடந்த ஞாயிறன்று (30) கொழும்பு குதிரைப்பந்தய மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு சாஹிரா கல்லூரியை கிண்ணியா மத்திய கல்லூரி 1–0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

கிண்ணியா மத்திய கல்லூரி அணி தொடர்ச்சியாக மூன்று தடவைகள் சமபோஷா சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சென் பற்றிக்ஸ் சம்பியன்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம், லண்டன் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையில் மாகாண ரீதியில் நடாத்திய 20 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நேற்று முன்தினம் (30) நடைபெற்ற இறுதி போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி அணியை 2–1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தத் தொடரின் சிறந்த வீரராக சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியின் இணைத் தலைவரான யு.து. ஜெறோம் தெரிவுசெய்யப்பட்டார்.

## சம்பியனானது நியூ ஸ்டார்

**ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்**



அல்–ஹுசைனிய்யா விளையாட்டுக் கழகம் நடாத்திய அல்–ஹுசைனிய்யா 23 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

கழகத்தின் தலைவர் சம்சுன் மக்கீன் ஜெலீல் தலைமையில் பாலமுனை ஹுசைனிய்யா விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (28) நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஒலுவில் நைட்ரைடர் அணியை நியூ ஸ்டார் வீழ்த்தியது.

## குர்ஆனை எரிப்பதை தடை செய்ய டென்மார்க் திட்டம்



பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர ரீதியான கவலைகள் அடிப்படையில் குர்ஆன் மற்றும் ஏனைய மத நூல்களை எரிப்பதுடன் தொடர்புபட்ட ஆர்ப்பட்டங்களுக்கு தடை விதிக்க டென்மார் பரிசீலித்து வருகிறது.

கருத்துச் சுதந்திரத்தை பாதுகாப்பது முக்கியமானதாக இருக்கும் அதேநேரம் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களால் கடும்போக்காளர்கள் பயன்பெறுவதோடு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஒன்றும் உள்ளது என்று டென்மார்க் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

டென்மார்க்கில் உள்ள தூதரகங்களுக்கு வெளியில் நடக்கும் போராட்டங்கள் உட்பட சில சூழ்நிலைகளில் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களில் தலையிடுவதற்கு டென்மார்க் அரசு திட்டமிடுகிறது.

சுவீடனிலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அந்நாட்டு பிரதமர் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம்களின் புனித குர்ஆனை எரிக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கு இந்த இரு ஸ்கண்டிநேவிய நாடுகளும் அனுமதி அளித்தது அந்த நாடுகளுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதோடு பல முஸ்லிம் பெரும்பான்மை நாடுகளுடன் முறுகல் நிலைக்கு வழிவகுத்துள்ளது.

டென்மார்க் வெளியுறவு அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், “டென்மார்க்கிற்கு குறிப்பிடத்தக்க பாதகமான விளைவை ஏற்படுத்தக் கூடிய மற்ற நாடுகள், கலாசாரங்கள் மற்றும் சமயங்களை அவமதிக்கு ஆர்ப்பாட்டங்களில் தலையிடுவது தொடர்பில் பரிசீலித்து வருகிறோம்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் கருத்துச் சுதந்திரம் அடிப்படையானது என்று டென்மார்க் அரசு வலியுறுத்தியுள்ளது.

# சர்வதேச செய்திகள்

## பாகிஸ்தான் அரசியல் பேரணியில் குண்டுத் தாக்குதல்: 44 பேர் பலி



வட மேற்கு பாகிஸ்தானில் அரசியல் பேரணி ஒன்றில் இடம்பெற்ற தற்கொலை குண்டு தாக்குதலில் குறைந்தது 44 பேர் கொல்லப்பட்டதோடு சுமார் 200 பேர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய புஜவுர் மாவட்டத்திலுள்ள கர் புறநகர் பகுதியில் பழைமைவாத ஜமாத் உலமா இ இஸ்லாம் கட்சியின் பேரணியிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை (30) இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு உடன் எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை.

காயமடைந்தவர்களில் 15 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கும் சூழலில் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.


கூடாரம் ஒன்றில் நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டிருக்கும் போது குண்டு வெடிப்பது வீடியோவில் பதிவாகியுள்ளது.

கட்சியின் மூத்த தலைவர்கள் இருந்த மேடைக்கு அருகிலேயே தற்கொலைதாரி குண்டை வெடிக்கச் செய்திருப்பதாக மாகாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தாக்குதலின் பின்னணியில் இஸ்லாமிய அரசுக் குழு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டபோதும் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குண்டு வெடித்ததும் கூடாரம் சரிந்து தப்ப முடியாமல் உள்ளே பலர் சிக்கிக் கொண்டதாகவும் பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

ஜமாத் உலமா இ இஸ்லாம் பாகிஸ்தானின் பிரதான மதச்சார்பு அரசியல் கட்சி ஒன்று என்பதோடு அது பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் அரசாங்க கூட்டணியின் அங்கமாக உள்ளது.

## பலஸ்தீன முகாமில் மோதல்: அறுவர் பலி



லெபனானில் உள்ள அகதி முகாம் ஒன்றில் ஏற்பட்ட மோதலில் குறைந்து ஆறு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸின் பத்தா அமைப்பு மற்றும் போட்டி இஸ்லாமியவாத குழுக்கள் இடையே ஐன் அல் ஹில்வே முகாமில் மோதல் வெடித்துள்ளது. கொல்லப்பட்டவர்களில் பத்தா தளபதி ஒருவரும் இருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

1948 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஐன் அல் ஹில்வே முகாம் லெபனானில் இருக்கும் மிகப்பெரிய பலஸ்தீன அகதி முகாம் என்பதோடு இங்கு 63,000க்கும் அதிகமானவர்கள் வசிக்கின்றனர்.

இந்த முகாமின் பாதுகாப்பு செயற்பாடுகளை பேட்டிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் நிலையில் இவ்வாறான மோதல்கள் வழக்கமாக நிகழும் ஒன்றாக உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஓகஸ்ட் மாதம் 1ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.